Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 24, 2023

வெள்ளிக்கிழமை மார்ச் 24, 2023 | ஒளி: 08 கதிர்: 236 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | free



# திங்களன்று 1ஆம் தவணை ஆரம்பம்

2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை இன்றுடன் (24) நிறைவடைவதாகவும் 2023ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை எதிர்வரும் திங்கட்கிழமை (27) ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 60 சதவீதத்துக்கு மேல் பாடசாலைக்கு மாணவர்கள் வர முடியாத காரணத்தால் இந்த வருடத்தில் அதிக விடுமுறை வழங்கவில்லை என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# தள்ளிப் போனது சின்னத் தேர்தல்




எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பை திட்டமிட்டபடி நடத்த முடியாது என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையே வியாழக்கிழமை (23) இடம்பெற்ற ஆலோசனைக்குப் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மார்ச் 28, 29, 30, 31 மற்றும் 2023 ஏப்ரல் 3 ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டபடி நடைபெறாது என்று ஆணைக்குழு வியாழக்கிழமை (23) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சுமையை அதிகரித்தால் தப்பிக்க முடியாது

எங்களிடம் கடன் மறுசீரமைப்புக்கு சரியான திட்டங்கள் இருந்திருந்தால் இவ்வாறு நிபந்தனைகளுக்கு இணங்கியிருக்க வேண்டியதில்லை. கடன்சுமையை அதிகரிப்பதால் அதிலிருந்து தப்பிக்க முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஐ.எம்.எவ்.வின் இலங்கைக்கான கடன் உதவியை

# எதிர்ப்போர் எதிரிகள்

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) இலங்கைக்கான கடன் உதவியை யாரும் எதிர்ப்பதாக இருந்தால் அவர்கள் நாட்டின் எதிரிகள் என எதிர்க்கட்சியின் சுயாதீன எம்.பியான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐ.எம்.எவ்வின் நிபந்தனை மிகவும் கடினமானது. குறிப்பாக 2026ஆம் ஆண்டாகும் போது, எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 15.3 வரை அதிகரிக்க வேண்டும். அப்படியானால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க வேண்டி ஏற்படுகிறது. அதற்காக அரசாங்கம் கட்டண அதிகரிப்புகளுக்கு செல்லவேண்டி ஏற்படும் என்றார்.



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதியின் பாராளுமன்ற உரை மீதான 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இலங்கை 2023 இல் வங்குரோத்து அடையும் நிலை இருக்கிறது. அதனால் இது தொடர்பாக முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்ளுமாறு 2016 மார்ச் மாதம் நானே முதலாவது ஆளாக அமைச்சரவைக்கு கோரிக்கை விடுத்தேன். அதனடிப்படையில் அன்று அரசாங்கம் செயற்பட ஆரம்பித்தது. அதற்காக ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து பாதுகாக்க எமக்கு சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. 2017 ஜூன் மாதத்தில் இருந்து 2020 ஜூன் வரைக்கும் அந்த நடவடிக்கையை மேற்கொண்டு சென்றோம். அதன் மூலம்தான் நாங்கள் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, நாட்டு நடவடிக்கையை பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் மேற்கொண்டு சென்றோம்.

தொடர்ச்சி P2



# பழைய விளையாட்டை விளையாட முடியாது

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியையும் உதவியையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சட்டப்படி அனுமதி தேவையில்லாத போதிலும் அதனை பெறவுள்ளதாக ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களுடன் வியாழக்கிழமை (23) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## 02 படகுகளில் அத்துமீறிய 12 இந்திய மீனவர்கள் கைது

செந்தூரன் பிரதீபன்

12 இந்திய மீனவர்களுடன் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இரண்டு இழுவை படகுகள், வடக்கு கடற்பரப்பில் வைத்து வியாழக்கிழமை ( 23) கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# நகைச்சுவைகளை கூற வேண்டாம்



நாடு பலமடைந்து வருகின்றது என்று ஜனாதிபதியும் வெளிநாட்டு நாணய கையிருப்பு பிரச்சினை இல்லை என்று மத்திய வங்கி ஆளுநரும் கூறுகின்றனர் என்று தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, நகைச்சுவைகளை கூற வேண்டாம் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் வியாழக்கிழமை (23) நடைபெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு

## 1.6 மில். டொலர் நிதியுதவி வழங்கியது ஜப்பான்

இலங்கையில் சமூக-பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மனிதாபிமான உதவிக்காக ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலரை, ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்புக்கு வழங்கியது.

தொடர்ச்சி P2


இறக்குமதி செய்யப்படும்

## பால்மாவின் விலை அடுத்த வாரம் குறையும்



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையைக் குறைப்பதற்கு தீர்மானத்துள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதுடன், அடுத்த வாரத்தில் இந்த விலைக்குறைப்பு அமலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. உலக சந்தையில் பால்மா விலை குறைவடைந்து உள்ளமையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் அசோக பண்டார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## டயானாவை சந்தேகநபராக பெயரிடுவதா, இல்லையா?

### ஏப்ரல் 6ஆம் திகதி உத்தரவு

பொய்யான தகவல்களை வழங்கி, இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிரான வழக்கில், அவரை சந்தேகநபராக பெயரிடுவதா, இல்லையா என்பது குறித்த உத்தரவு ஏப்ரல் 6ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என்று கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், வியாழக்கிழமை (23) அறிவித்தார்.

உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர், இராஜாங்க அமைச்சர் வசிக்கும்

தொடர்ச்சி P2

இந்த நாட்டு மாணவர்களை

# பணயக் கைதிகளாக வைத்திருக்க இடமளியேன்

### பாடசாலைகளை அத்தியாவசிய சேவையாக்க நேரிடும் என்கிறார் ஜனாதிபதி



இந்நாட்டு மாணவர்களை பல்வேறு குழுக்களின் பணயக் கைதிகளாக வைத்திருக்க இடமளிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பாடசாலை துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல் மூலம் விரைவில் தீர்வு காண முடியும் என்று தாம் நம்புவதாகவும்,

தொடர்ச்சி P2

## அமைச்சர்கள் இருவர் தென்னாபிரிக்கா விஜயம்

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவதில் தென்னாபிரிக்காவின் அனுபவம் குறித்த நுண்ணறிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் கலாநிதி நலேடி பாண்டூரின் அழைப்பின் பேரில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, தென்னாபிரிக்காவுக்கு தொழில்முறை விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## படிப்படியாக பலம் பெறுகிறது ரூபாய்




இலங்கை மத்திய வங்கியால் வியாழக்கிழமை (23) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை மற்றும் கொள்வனவு விலைகள் குறைந்துள்ளன.

வியாழக்கிழமை (23) நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 311 ரூபாய் 26 சதமாகவும் விற்பனை விலை 328 ரூபாய் 60 சதமாகவும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# யூரியாவின் விலையை குறைக்க தீர்மானம்

உள்ளூர் சந்தையில் யூரியா உரத்தின் விலையை 7,500 ரூபாயால் குறைப்பதற்கு பல தனியார் நிறுவனங்கள் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

50 கிலோ கிராம் யூரியா மூடை ஒன்றின் விலை 18,500 ரூபாயில் இருந்து 11,000 ரூபாயாக குறைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# 12 நாட்டு பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல்

12 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் புதன்கிழமை (22) நடைபெற்றது.



இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்த விடயங்களை தெளிவுபடுத்தும் முதன்மை நோக்கத்துடன் இக்கலந்துரையாடல் இடம் பெற்றது.

தொடர்ச்சி P2

அடுத்த தேர்தலுக்குப் பின்னர் உருவாகும்

# எந்தவோர் அரசாங்கத்துக்கும் பலமான பங்காளியாவோம்

### தற்போது இணைய நாட்டம் இல்லை என்கிறார் மனோ

அடுத்த தேர்தலில் உண்மையான ஆட்சி மாற்றம் நடைபெறும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய ஆட்சி மலரும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், எது எப்படி இருந்தாலும், அடுத்த தேர்தலுக்குப் பின்னர் உருவாகும் எந்தவோர் அரசாங்கத்திலும் நாம் பலமான பங்காளியாக இருப்போம் என்றார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயற்குழு கூட்டம் கொழும்பு தெற்கு பணிமனையில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## தள்ளி போனது...

தேர்தலுக்கான புதிய திகதி விரைவில் தீர்மானிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தலை நடத்துவதற்கு நிதி கிடைக்கவில்லை என்று அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவிக்க உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டியிருந்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு கட்சி செயலாளர்களின் கருத்துக்களை சேகரிக்கும் என்றும், தேர்தலுக்கான புதிய திகதி குறித்து மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலை நடத்துவதற்கான திகதியை மீண்டும் திட்டமிடுவது தொடர்பாக, தங்கள் உறுப்பினர்களிடையே மற்றொரு கலந்துரையாடலை நடத்த ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் புஞ்சிஹேவா தெரிவித்திருந்தார்.

## திங்களன்று ஆம்...

பாடசாலைகளில் முதலாம் தவணை பொதுவாக ஜனவரியில் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கொரோனா காரணமாக தாமதமான கால அட்டவணையை தாங்கள் முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்தி முடித்ததாக தெரிவித்த அவர், 2022 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பெரும்பாலான பாடசாலைகள் செவ்வாய்க்கிழமை (28) தரம் ஒன்று மாணவர் சேர்க்கைக்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

## சுமையை...

ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் வியாழக்கிழமை (23) நடைபெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், “சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்ததும் மேலே வருவோம் என்று அரசாங்கம் கூறுவது நகைச்சுவையானது. கடந்த காலங்களில் ஊழல் மோசடியின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்காமையே நாடு இந்த நிலைக்கு தள்ளப்படக் காரணமாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை பெற்றுக்கொள்வது பெருமையடையும் விடயமல்ல. வெட்கப்பட வேண்டிய விடயமே. சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கு நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷவே தீர்மானித்தார். அப்போது அதன் நிபந்தனைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஆனால் நிதி அமைச்சராக ரணில் வந்த பின்னரும் இன்னும் சரியாக அந்த நிபந்தனைகளை முன்வைக்கப்படவில்லை. எவ்வாறாயினும் எரிபொருள் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு, எரிவாயுவிலை அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என்பன இந்த நிபந்தனைகளுக்கமையே நடந்தன என்றார்.

# எதிர்ப்போர் எதிரிகள்

ஆனால் 2019இல் கோட்டாபய ராஜபக்ஷ் தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் இவர்கள் சர்வதேச நாணய நிதியத்தை உதைத்தார்கள். நாணய நிதியத்தில் இருந்து விடுபட்டு நாட்டின் இறையாண்மையை பாதுகாத்ததாக பிரசாரம் செய்தார்கள். அதேபோன்று உங்கள் நாடு ஸ்திரமற்ற நிலையில் இருக்கிறது. நாடு வங்குரோத்து அடையப்போகிறது என 2020 மார்ச் மார்ச் முதல் வாரத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கை மத்திய வங்கிக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

நாடு இந்தளவு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு செல்வதற்கு காரணம், அன்று சர்வதேச நாணய நிதியம் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக செயற்படாமல் தான்தோன்றித்தனமாக செயற்பட்டமையாகும். அதனால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பைவிட பலமடங்கு விசாலமானதாகும். அதனால் இந்த பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் கட்டண அதிகரிப்புகளுக்கு செல்லவேண்டி ஏற்படும். அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான மூச்சுவிடுவதற்கான சந்தர்ப்பமே தவிர,பட்டாசு கொளுத்தி கொண்டாடுவதற்கு எதுவும் இல்லை. அத்துடன் நாணய நிதியத்தின் இந்த கடன் உதவியை யாரும் எதிர்ப்பதாக இருந்தால் அவர்கள் நாட்டின் எதிரிகள் என்றார்

## பழைய விளையாட்டை...

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையானது பொருளாதாரத்தின் மறுசீரமைப்பு என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் கடனில் மட்டுமின்றி இந்த ஒப்பந்தத்தை நாடு அமுல்படுமா? இல்லையா? என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது என்று தெரிவித்த அவர், கடனை கட்டவேண்டுமாயின் வீட்டிலிருக்கும் ஒரு பொருளை விற்றே ஆகவேண்டும் என்றார்.

எல்லா பங்கங்களிலும் தவறுகள் உள்ளன. அவற்றை திருத்திக்கொண்டு இணைந்து உதவுங்கள், சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுத்துங்கள் எனக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி பழைய விளையாட்டை விளையாட முடியாது. பல திட்டங்களை எதிர்த்தவர்கள் எம்மோடு இருக்கின்றனர் என்றால் நல்லதுதானே என்றார்.

அரசாங்கத்தி செலவை குறைக்கவேண்டும் வருமானத்தை அதிகரிக்கவேண்டும் அத்துடன் பணவீக்கத்தை குறைக்கவேண்டும். நாட்டை மீண்டெழச் செய்வதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது வரலாற்று மாற்றம் என்றார்.

## நகைச்சுவைகளை...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உள்ளிட்ட கடனுடன் 6,200 கோடி ரூபாய் கடனுக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது. நாட்டை சீரழித்தவர்களுக்கு மாற்று வழிகளை கொடுப்பதற்காக நாங்கள் வரவில்லை. அவர்கள் வீட்டுக்கு போக வேண்டும். நாங்கள் எப்படி மாற்றுவழியில் முன்னேற்றுவது என்று தீர்மானம் எடுக்கலாம்.

நாடு வங்குரோத்தடையவில்லை. பலமடைந்து வருகின்றது என்று ஜனாதிபதி கூறுகின்றார். மத்திய வங்கி ஆளுநரும் வெளிநாட்டு நாணய கையிருப்பு பிரச்சினை இல்லை என்று கூறுகின்றார். இவ்வாறு நகைச்சுவைகளை கூறாது அது உண்மையென்றால் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகளையும், பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தலாம். மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தலாம். இதனை செய்யாது மக்களை ஏமாற்றிக்கொண்டு இருக்க வேண்டாம் என்று கேட்கின்றோம்.

இதேவேளை நிலைமையை அறிந்துகொள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தேவையான நிதியை வழங்கி உடனடியாக தேர்தலை நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இப்போது கடன் வாங்குவதுடன், நாட்டின் அரச நிறுவனங்களை விற்பதற்கும் முயற்சிக்கின்றனர். லெபனான் போன்ற நாடுகளும் சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்றதுதான்இறுதியில் வீழ்ந்து போனது. இதனால் சர்வதேச நாணய நிதியத்தை நம்பிக்கொண்டு இருக்கக்கூடாது.

அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இதனுடன் தொடர்புடையவர்களுக்கு நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் தண்டனை வழங்குவோம்.

முன்னெப்போதும் இல்லாதவாறு நாடு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. உண்ண உணவு இல்லாவிட்டாலும் சிலர் பாற்சோறு சாப்பிடுகின்றனர். சிறிய கடன் கிடைத்தது என்பதற்காக பாற்சோறு சாப்பிடும் மனிதர்கள் இருப்பார்களாக இருந்தால் அவர்களுக்கு அறிவு உண்டாகட்டும் என்று வேண்டுகின்றோம்.

## பாதிக்கப்பட்ட...

இந்த நிதியானது, “நெருக்கடியில் உள்ள பெண்களை வலுவூட்டல்” என்ற புதிய செயற்திட்டத்தின் ஒரு பகுதியென்பதுடன், இது பெப்ரவரி 2023 முதல் டிசெம்பர் 2023 வரை செயற்படும் என்றும் இது பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்ட குறைந்தது 1,200 பெண்கள் உட்பட அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வீழ்ச்சியடையும் அபாயத்தில் உள்ள 500 பெண்கள் தலைமையிலான நுண் நிறுவனங்களுக்கும், வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தில் உள்ள 2,000 நபர்களுக்கும் மேலும் ஆதரவளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“தற்போதுள்ள நெருக்கடிக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் பதிலளிப்பு மற்றும் மீட்பு முயற்சிகளில் பின்தள்ளிவிடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதுடன் இந்த நேரத்தில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதே எங்கள் இலக்காகும் என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவரானமிசுகோஷி ஹிடேகி வலியுறுத்தினார்.

பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பவங்களின் தொடர்ச்சியான அதிகரிப்பை கனடா்டத்திலுள்ள அறிக்கைகள் பிரதிபலிக்கின்ற நிலையில், தற்போதைய நெருக்கடி மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை ஆகியவை பாதுகாப்பான வீடுகள் மற்றும் தங்குமிடங்கள் போன்ற அரச சேவைகளை அணுகுவதைத் தடுப்பதுடன், இதன் விளைவாக பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு பேரழிவுகரமான தாக்கங்கள் ஏற்படுகின்றன.

இந்த செயற்திட்டத்தின் மூலம், உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை தொடர்ந்து அணுகக்கூடிய பாதுகாப்பான வீடுகளை ஐ.நா பெண்கள் அமைப்பினர் வழங்குவார்கள்.

## பால்மாவின்...

அதனடிப்படையில், ஒரு கிலோகிராம் பால் மா பொதியின் விலை 200 ரூபாயாலும் 400 கிராம் பால் மா பொதியின் விலை 80 ரூபாயாலும் குறைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

3,095 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா பொதி 2,895 ரூபாய்க்கும் 1,240 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதியின் விலை 1,160 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

## 02 படகுகளில்...

வெளிநாட்டு மீன்பிடி இழுவை படகுகளின் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளை கட்டுப்படுத்த கடற்படை இலங்கை கடற்பரப்பில் தொடர்ந்து ரோந்து நடவடிக்கைகளில் கடற்படை ஈடுபட்டு வருகிறது.

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், யாழ். அனலைதீவு மற்றும் கோவிலான் கடற்பரப்பில் வைத்து குறித்த படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில், இலங்கை கடற்பரப்பில் தொடர்ந்து தங்கியிருந்த 12 இந்திய மீனவர்களுடன் கடற்படையினர் இரண்டு இந்திய வேட்டையாடும் இழுவை படகுகளை வைத்திருந்தனர்.

12 இந்திய மீனவர்களுடன் கைப்பற்றப்பட்ட இழுவை படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்தது.

## படிப்படியாக பலம்பெ...

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 312 ரூபாய் 61 சதமாகவும் விற்பனை விலை 330 ரூபாய் 16 சதமாகவும் புதன்கிழமை (22) பதிவாகியிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கான அனுமதி திங்கட்கிழமை (20) கிடைத்த நிலையில், செவ்வாய்க்கிழமை (21) முதல் இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யூரியாவின்...

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நீட்டிக்கப்பட்ட கடன் வசதியை திங்களன்று இலங்கை பெற்றுக்கொண்டதை அடுத்து அமெரிக்க டொலரின் விலை குறைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டயானாவை...

டயானா கமகேவின் குடியுரிமை தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடமும் ஆட்பதிவு திணைக்கள ஆணையாளரிடமும் வாக்குமூலங்களை பதிவு செய்து மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு (சீ.ஐ.டி) கொழும்பு பிரதான நீதவான் கட்டளையிட்டார்.

டயானா கமகே இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து இல்லாமல் இலங்கையில் வசிக்கும் பிரித்தானிய பிரஜை என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்து சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.இந்த சம்பவம் தொடர்பில் சீ.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேற்குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## பணயக் கைதிகளாக...

இல்லையேல் பாடசாலைகளை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நேரிடும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு சங்கமித்தா மகளிர் கல்லூரியில் வியாழக்கிழமை (23) முற்பகல் இடம்பெற்ற பிரிவெனா மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைத் துணிகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவத் தேரர்கள், சில மாதர்கள் மற்றும் மற்றும் 40 மாணவர்களுக்கு ஜனாதிபதி அடையாள ரீதியாக பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி வைத்தார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பதில் கல்விச் செயலாளர் ஹேமந்த பிரேமதிலக மற்றும் சங்கமித்தா மகளிர் கல்லூரியின் அதிபர் துஷாரி டி சில்வா ஆகியோர் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைத்தனர்.

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை துணிகளில் 70% வீதமானவை, சீன அரசாங்கத்திடம் இருந்து நன்கொடையாக கிடைத்துள்ளதுடன், அவை அனைத்தும் தற்போது நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு வர்த்தகர்களால் எஞ்சிய சீருடை துணிகள் வழங்கப்படுகின்றன.

இந்தியக் கடன் உதவியின் கீழ் மூலப் பொருட்களைப் பெற்று அரச அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் உள்நாட்டு விநியோகஸ்தர்களால் அச்சிடப்பட்ட பாடசாலைப் பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவை உத்தியோகபூர்வமாக இதன் போது விநியோகிக்கப்பட்டன.

## அமைச்சர்கள் இருவர்...

மார்ச் 21 ஆம் திகதி முதல் 25 வரையான விஜயத்தில் அமைச்சர் சப்ரியுடன் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவும் சென்றுள்ளார்.

உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலம் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதில் உறுதியாக இருப்பதாக சர்வதேச அரங்குகள் உட்பட பல தளங்களில் உறுதியாகக் கூறப்பட்ட இலங்கையின் கொள்கைக்கு இணங்க இந்த விஜயம் அமைந்துள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை உபகுழுவினால் முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்தக் கருத்தை செயற்படுத்துவதற்கும், கலந்துரையாடல்களைத் தொடங்குவதற்கும், உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்டத்தை உருவாக்குவதற்கும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் நீதி அமைச்சருக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

இந்த செயன்முறைக்கு ஆதரவாக, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவதில் தென்னாபிரிக்காவின் அனுபவம் குறித்த நுண்ணறிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு தென்னாபிரிக்க அரசாங்கம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# எந்தவோர் அரசாங்கத்துக்கும் பலமான...

மாவட்டம் தழுவிய வட்டார செயலாளர்களுக்கு நியமனங்களை வழங்கி உரையாற்றிய கட்சி தலைவர் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

“நமக்கு இந்நாட்டில் ஜனாதிபதி, பிரதமர் ஆக முடியாது. சட்டத்தில் தடை இல்லை. ஆனால், நடைமுறையில் அந்த உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கங்களில் பலமான பங்காளியாக இருக்கும் உரிமையை நாம் பயன்படுத்துவோம். அதன் மூலமே நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு நாம் பணியாற்ற முடியும்.இதுவே ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு. நாம் இடம்பெறும் எமது அரசாங்கம் எதுவென நாம் உரிய வேளையில் தீர்மானிப்போம்.

இன்றைய அரசில் இணைந்து உடனடியாக பதவி பிரமாணங்களை செய்து பதவி ஏற்க எமக்கு முடியும். அதற்கான திறந்த அழைப்பு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து, எமக்கு எப்போதும் இருக்கிறது. ஜனாதிபதியை அணுக எனக்கு தரகர் தேவையில்லை. ஒரு தொலைபேசி அழைப்பு போதும்.

ஆனால், இன்று அரசில் நுழைந்து அமைச்சராக ஊர்வலம் வருவதில் எமக்கு நாட்டம் இல்லை. அதற்கான காரணங்கள் இன்று இல்லை. மக்களுக்கு பணி செய்யும் சாத்தியங்கள் இந்த அரசில் இன்று இல்லை.

கடந்த 2015-2019 நல்லாட்சி அரசில் நாம் பலத்த சவால்களுக்கு மத்தியில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம். அதற்கு முன் 40 ஆண்டுகளில் மலையகத்தில் நடைபெறாத அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம்.

சொந்த காணி, தனி வீட்டு திட்டத்தை அமைச்சரவை அங்கீகார சட்ட வலுவுடன் ஆரம்பித்து வைத்தோம். மலையகத்துக்கு இந்திய பிரதமர் மோடியை அழைத்து வந்து அவர் வாயில் இருந்து மேலும் 10,000 வீடுகளுக்கான உறுதிமொழியை பெற்றோம். அன்று நாம் ஆரம்பித்த திட்டங்களை, இன்று அங்கே முன்னேடுத்தாலே போதும். புதிதாக வேறு ஒன்றும் செய்ய தேவையில்லை.

கொழும்பில் ஆண்டுகால 2015-2019 நல்லாட்சி அரசில், வட கொழும்பில் நமது அரசு, 13,150 தொடர்மாடி மனைகளை கட்டியது. இன்று வடகொழும்பில் பின்தங்கிய குடிசை குடியிருப்புகள் இல்லை. பின்தங்கிய குடிசை வாழ் மக்களை நாம் தொடர்மாடி மனைகளில் குடியமர்த்தினோம்.

ஒருவரையும் கொழும்புக்கு வெளியே அப்புறப்படுத்த கூடாது என்பதே என் ஒரே நிபந்தனையாக இருந்தது என்றார்.

## 12 நாட்டு...

குறிப்பாக,இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டல், அரசியலமைப்பைப் பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. இலங்கையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் தூதுவர்களிடம் கேட்டுக் கொண்டார்.



# வரப்பிரசாதங்களை தடுக்கும் வகையில் செயற்பட்டதில்லை

"வெளிநாட்டு தூதுவர்களுடன் கலந்துரையாடி தேர்தல் நடவடிக்கைகளை செயற்படுத்தும் உரிமை எமக்கு இருக்கின்றது. அதனால்தான் நாம் தேர்தலை நடத்துவதன் அவசியத்தை வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து எடுத்துரைத்தோம்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும், கூறுகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு மார்ச் 9ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் தற்போது ஏப்ரல் 25ஆம் திகதி என தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றாலும் தேர்தலுக்கு தேவையான பணத்தை அரசாங்கம் ஒதுக்காமல் இருப்பதால் தேர்தல் நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.



அத்துடன் ஆளும் தரப்பு எம்.பி.க்களைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களுக்கு இருக்கும் சிறப்புரிமை ஊடாக நாட்டின் நீதிமன்றத்துக்கு விடுக்கப்படும் அழுத்தங்களை அரசாங்கம்உடனடியாக நிறுத்த வேண்டும். நீதிபதிகளை அசௌகரியங்களுக்கு உட்படுத்த வேண்டாம். அத்துடன் பிரதமரின் அமைச்சான உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹப்புஹின்னவை பழிவாங்க வேண்டாம். அவர் தற்போது ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவர் எந்த தவறும் செய்யவில்லை.

இது தொடர்பில் நாங்கள் வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து கலந்துரையாடும்போது நாட்டின் உள்ளக நடவடிக்கைகளை இணைத்து ஒருபோதும் கலந்துரையாடியதில்லை. அதேபோன்று நாட்டுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்கள், கடன்களை தடுக்கும் வகையில் ஒருபோதும் செயற்பட்டதில்லை.

தேர்தல் இடம்பெறுவதை தடுத்திருப்பது, நாட்டின் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் மரண அடி . நாட்டில் சர்வாதிகார ஆட்சி இல்லை. ஆனால் சர்வாதிகார முறையிலேயே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. நாட்டுக்கு மக்களுக்கு இருக்கும் வாக்குரிமைய பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதனால் வெளிநாட்டு தூதுவர்களுடன் கலந்துரையாடி தேர்தல் நடவடிக்கைகளை செயற்படுத்தும் உரிமை எமக்கும் இருக்கின்றது. மாறாக எமது நாடு பல சர்வதேச ஒப்பந்தங்களை செய்திருக்கிறது. அந்த ஒப்பந்தங்கள் அனைத்திலும் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும் என தெரிவித்திருக்கிறது. அதனால்தான் நாங்கள் தேர்தலை நடத்துவதன் தேவையை வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து எடுத்துரைத்தோம் என்றார்.

# கனவு உலகில் மிதக்கிறார் ரணில்



"பொதுஜன பெரமுவினர் தன்னை ஏமாற்றுகின்றனர் எனத்தெரியாது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கனவு உலகில் இருக்கின்றார்" என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,"ஜனாதிபதி இப்போது கனவு உலகில் இருக்கின்றார். மொட்டுக் கட்சியினர் அவரை ஏமாற்றுகின்றனர் என்று தெரியாமல் இருக்கின்றார். அவர் அடுத்த வருடம் ஓகஸ்ட் வரையிலேயே ஜனாதிபதியாக இருப்பார். வேலைகளை செய்வதற்காக நாடு முழுவதும் பயணிக்க வேண்டும். இவர்கள் இணைந்து ஜனாதிபதி வேட்பாளராக தன்னை அறிவிப்பார்கள் என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றார்.

மக்கள் போராட்டத்தின் போது மொட்டுக் கட்சிக்காரர்களுக்கு பாதுகாப்பு தேவைப்பட்டது. அதன்படியே ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தனர். இன்னும் ஜனாதிபதி மொட்டுக் கட்சியின் பாதுகாவலர் மட்டுமே" என்றார்.

# ஜனாதிபதிக்கு நன்றி

அரச நிறுவனங்களை விற்றால் தமது அரசாங்கத்தில் மீள வாங்கிவிடுவோம் என்று எச்சரித்த பொதுஜன பெரமுனவினரையே அவற்றை விற்க இணங்கச் செய்த ஜனாதிபதிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் விவாத்த்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு மொட்டுக் கட்சியினர் வந்துள்ளமை தொடர்பில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 2018 ஆம் ஆண்டில் விற்கப்படும் நிறுவனங்களை நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் வாங்குவோம் என்று கூறினார்.

ஆனால் இப்போது அந்த மொட்டுக் கட்சியினரே அவற்றை விற்க வேண்டும் என்ற மனநிலைக்கு வந்தமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

இதேவேளை தற்போதைய ஜனாதிபதி 2015இல் அரசாங்கத்தில் இருக்கும் போது யார் திருடன் என்ற போது மஹிந்த திருடன் என்று நாங்கள் கூச்சலிட்டோம். அவ்வாறு கூறியவர் இப்போது அவர்களுடன் இருக்கின்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்க யார் என்று தெரியாமலே கைதட்டிக்கொண்டு இருக்கின்றனர். நாங்கள் கைதட்டுவதற்கு இடமளித்து பாரத்துக்கொண்டு இருக்கின்றோம் என்றும் மரிக்கார் எம்.பி தெரிவித்தார்.

# பாதாள குழுவினரே நாட்டை ஆள்கின்றனர்



பாதாள குழுவினர் நாட்டை ஆள்கின்றனர் எனவும், சட்ட ஒழுங்கு முறையாக அமல்படுத்தப்படுவதில்லை எனவும் மக்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது எனவும் முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரை மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரிசை யுகத்துக்கு முடிவு க்கு கொண்டு வந்தார் என கொழும்பில் உள்ள படித்தவர்கள் முட்டாள்களை போல் கூறுகிறார்கள்.

பணம் இல்லாத காரணத்தினால் தான் எரிபொருள்,எரிவாயு ஆகியவற்றுக்கு வரிசை இல்லாமல் போனது. அத்தியாவசிய தேவைகளுக்கான கேள்வி குறைவடைந்ததால் வரிசைக்கான தேவை தோற்றம் பெறவில்லை.

அராஜகமான அரசியல் மீண்டும் தலைத்தூக்கியுள்ளது.ஜனநாயக போராட்டத்தில் அரசாங்க தரப்பு குண்டர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள்,இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்,போராட்டக் காரர்கள்,பல்கலைக்கழக மாணவர்களை அடக்கும் செயற்பாடுகளை ஜனநாயகத்துக்கு முரணான வகையில் அரசாங்கம் முன்னெடுக்கிறது,அரசாங்க த்தின் கட்டளைக்கு அமைய சட்டத்துக்கு விரோதமாக செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம்.

பொலிஸ் சேவையில் இருந்து கடந்த ஆண்டு 1000பேர் விலகியுள்ளதுடன்,இந்த ஆண்டு நிறைவடைந்த காலப்பகுதியில் 250 க்கும் அதிமானோர் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள்.

ஊழல் மோசடிக்கு எதிர்ப்பு தெரிவித்து போரடியவர்கள் இவ்வாறு பதவி விலகி சென்றுள்ளார்கள்.மறுபுறம் இராணுவத்திலிருந்து 25 ஆயிரம் வீரர்கள் இடை விலகியுள்ளார்கள்.யுத்த காலத்தில் கூட இந்த நிலை காணப்படவில்லை.

ஊழல் அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுகிறார்கள்,அவர்களை மக்கள் ஆட்சிக்கு கொண்டு வருகிறார்கள் பின்னர் ஊழல்வாதிகள் நாட்டை கொள்கையடிக்கி றார்கள்,ஆகவே நாட்டு மக்கள் இதனை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்,தரமானவர்களை மக்களை தெரிவு செய்ய வேண்டும்

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது வன்மங்களை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது,ஊடக சுதந்திரத்துக்கு எதிரான செயற்பாடுகள் அரசாங்கத்துக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்,ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க என்றும் துணைநிற்போம். சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக நியாயம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சட்டக்கல்லூரி மாணவர்கள் தங்களின் எதிர்ககாலத்தை கருத்திற் கொண்டு ஏதாவதொரு வழிமுறையில் ஆங்கில மொழியில் தேர்ச்சியடைய வேண்டும்.

நாட்டின் நிர்வாகம் முறையற்றதாக உள்ள காரணத்தினால் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை சீரழிந்துள்ளது. இப்பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் கவனத்திற் கொள்வதில்லை,ஆகவே நாட்டு மக்கள் துணிவுடன் செயற்பட வேண்டும்.

ஊழல்வாதிகளை நாட்டு மக்கள் முழுமையாக புறக்கணிக்க வேண்டும்,அவர்களுக்கு எதிராக வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.ஊழல் அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்க மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் அதனை விடுத்து சுயநலமாக செயற்பட்டால் காலம் முழுவதும் கண்ணீரோடு வாழ நேரிடும்.இளம் தலைமுறையினர் ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக ஒன்றிணைந்து ஜனநாய க போராட்டத்தில் இறங்க வேண்டும்" என்றார்.

# காணி இழுத்தடிப்பு வழக்குகள் போல் பாராளுமன்றத்திலும் தாமதமான பதில்

## 3 ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைத்த பதில்



"பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தொடர்பில் 2020 ஆம் ஆண்டு முன்வைத்த கேள்விகளுக்கு 3 ஆண்டுகளின் பின்னர் ,மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் தற்போது பதிலளிக்கிறார்"என என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. துஷார இந்துனில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவராக மொஹமட் உவைஸ் பதவி வகிக்கி றார்,இவருக்கு 1 இலட்சம் ரூபா மாத சம்பளத்துடன் 6000 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுகிறது எனப் பதிலளித்தார்.

தன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. துஷார இந்துனில்,காணி வழக்கு இழுத்தடிக்கப்பட்டு தாமதமாக்கப்படுவதை போன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு தாமதமான நிலையில் பதில் கிடைக்கப் பெறுகிறது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர்

# ரூ. 35- 40 க்கு முட்டை

இந்தியாவிலிருந்து முதற்கட்டமாக 20 இலட்சம் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் , அவற்றை 35 தொடக்கம் 40 ரூபாய்க்குள் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "நாட்டில் கடந்த ஏழு மாதங்களாக முட்டைக்கான தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதனைக் கவனத்திற் கொண்டு நாம் விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவனங்களோடு பேச்சு வார்த்தை நடத்தினோம்.அதன் போது அவர்கள் நாட்டிற்கு தேவையான முட்டையில் 40 வீத பற்றாக்குறை காணப்படுவதாக எமக்கு அறிவித்தனர்.

அதன் பின்னர் உணவு பாதுகாப்பு குழுவுக்கு அது அறிவிக்கப்பட்டு அதனை யடுத்து அமைச்சரவைக்கும் அது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னரே வர்த்தக அமைச்சர் என்ற வகையில் நான் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து முட்டையின் விலையை அதற்கு மேல் அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுத்தேன்.



எவ்வாறெனினும் நாட்டின் முட்டைக்கான தேவையில் 40 வீத பற்றாக்குறை நிலவியதால் எதையும் முறையாக முன் னெடுக்க முடியாமல் போனது.

அதன் பின்னரே நாம் முட்டையை கொல்வனவு செய்வது என கொள்கை ரீதியான முடிவை எடுத்தோம். அது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அமைச்சரவை உப குழுக்கள் இரண்டு நியமிக்கப்பட்டு அதன் ஊடாக முட்டையை இறக்குமதி செய்வதே சிறந்தது என்ற பரிந்துரைகள் பெறப்பட்டன.

அதனையடுத்து நாம் முட்டை இறக்குமதிக்கான நடவடிக்கையை மேற்கொண்டு அதற்கிணங்க இன்று (நேற்று )முதலாவது தொகை முட்டை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அதனை பரிசோதனை செய்வதற்காக மூன்று தினங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கோரப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் பாரிய முட்டை விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்திடமிருந்தே இலங்கைக்கும் முட்டை பெறப்பட்டுள்ளது .உரிய சான்றிதழுடனேயே நாம் அதனை கொள்வனவு செய்கின்றோம்.

ஓரிரு தினங்களில் இந்த முட்டை சந்தைக்கு விற்பனைக்காக விடப்பட உள்ளது. அதை வேளை,உலகில் முன்னணி நிறுவனம் ஒன்றிலிருந்து திரவ முட்டையை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளோம். திரவ முட்டை விமானங்களில் உணவு தயாரித்தல் உள்ளிட்ட பாரிய நட்சத்திர ஹோட்டல்களிலும் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகும். அதற்கான இறக்குமதி அனுமதியும் வழங்கியுள்ளோம். அந்த வகையில் இறக்குமதி செய்யும் முட்டைகள் 35 மற்றும் 40 ரூபாவுக்கிடையில் விற்பனை செய்யவும் அதேபோன்று திரவ முட்டைகளையும் அதே விலைக்கு பெற்றுக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளங்கள் அமைச்சின் அனுமதியும் அதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அதனை இறக்குமதி செய்வதற்கான அனுமதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

திரவ முட்டையின் தரம் தொடர்பில் எவரும் சந்தேகம் கொள்ள தேவையில்லை. பண்டிகை காலங்களில் நாட்டில் முட்டைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது தற்போதைய நிலையில் பாராளுமன்றத்தில் கூட முட்டை இல்லாத நிலையே காணப்படுகிறது என்றார்.

# சுவையூட்டிகளின் பாவனையை முற்றாகத் தவிர்க்கவும்

## காத்தான்குடி வர்த்தகர் சங்கம் வேண்டுகோள்

எம்.எஸ்.எம் நூர்தீன்

சுவையூட்டிகளின் பாவனையை முற்றாகத் தவிர்ந்து கொள்ளுமாறு காத்தான்குடி வர்த்தகர் சங்கம், காத்தான்குடியை சேர்ந்த ஹோட்டல் மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

காத்தான்குடியை சேர்ந்த ஹோட்டல் மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்தியாளர்களுடன் செவ்வாய்க்கிழமை (21) இரவு, காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன கேட்போர் கூட மண்டபத்தில், 'ரமழான் காலத்தை மையப்படுத்தி ஆரோக்கியமான உணவு' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.எல். எம் பரீட் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கத்தின் செயலாளர் ஆரிப் உட்பட காத்தான்குடியை சேர்ந்த ஹோட்டல் மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, உணவுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சுவையூட்டிகள், அதனால் மக்களுக்கு ஏற்படும் விளைவுகளை கருத்தில் கொண்டு, முறையான ஒழுங்கமைத்தலுடன் ரமழான் காலத்திலாவது சுவையூட்டிகளின் பாவனையிலிருந்து முற்றாக தவிர்ந்து கொள்வது எனவும் இப்தாருக்கான சிற்றுண்டி வகைகளை (ஷோட்டிஸ்) ஆகக் கூடிய விலை 50 ரூபாயாக மட்டுப்படுத்துமாறும் அல்லது அதனை விட குறைந்த விலையில், அதன் தரத்தில் எவ்வித குறைவையும் ஏற்படுத்தாமல், மக்களுக்கு விற்பனை செய்யுமாறும் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. இதற்கான தீர்மானத்தை குறித்த ஹோட்டல் உரிமையாளர்கள் அவர்களுக்குள் ஆலோசனை செய்து ஒரு சாதகமான பதிலை வழங்குவதாக வாக்களித்துள்ளார்கள்.









# சிவபூமி திருமந்திர அரண்மனைக்கு எண்ணைக்காப்பு

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவிலுக்கு முன்பாக, திருமந்திரத்தின் 3,000 பாடல்களை கருங்கல்லில் செதுக்கிய, 'சிவபூமி திருமந்திர அரண்மனை'க்கு எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வுகள் நேற்று (23) நடைபெற்றன.
கருங்கற்களில் பொறிக்கப்பட்ட திருமந்திரம் மற்றும் 108 சிவலிங்கங்கள் கொண்ட சிவபூமி திருமதந்திர அரண்மனைக்கான எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெற்றது.
இன்று காலை அரண்மனையின் கும்பாபிசேகம் நடைபெற உள்ளதுடன் குறித்த அரண்மனை உத்தியோகபூர்வமாக ஆலயத்திடம் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

வா. கிருஸ்ணா

# விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

க. விஜயரெத்தினம்



மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து, கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பெற்றுவந்த அபிவிருத்தி உத்தியோகஸ்தர் நேற்று (23)அதிகாலை உயிரிழந்துள்ளார்.

**உயிரிழந்தவர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக கடமையாற்றியவரான திருமதி தர்ஷினி மணாளன் (வயது–45) எனும் மூன்று பிள்ளைகளின் தாயாராவர்**

இச்சம்பவம், வெள்ளிக்கிழமை (17) மட்டக்களப்பு தலைமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்லை வீதியில் இடம்பெற்றது. இவ்விபத்தில் படுகாயமடைந்த அபிவிருத்தி உத்தியோகஸ்தர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் கண்டி போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிசிச்சைக்காக அனுப்பப்பட்டு, அங்கு சிசிச்சை அளிக்கப்பட்டு வந்தநிலையிலேயே சிசிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக கடமையாற்றி வருகின்றவரும், மட்டக்களப்பு எல்லை வீதியில் வசிப்பவருமான திருமதி தர்ஷினி மணாளன் (வயது-45) எனும் மூன்று பிள்ளைகளின் தாயாராவர்.

'விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்' என

# வாழைச்சேனை விவசாயிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஆர். ஜெயஸ்ரீராம்

வாழைச்சேனை கமநல திணைக்களத்துக்கு உட்பட்ட வாகனேரி, மதுரங்கேணி, சாப்பமடு கமநல அமைப்பு விவசாயிகள் நேற்று முன்திம் (22) வாழைச்சேனை கமநல திணைக்களத்துக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"எங்கள் மூதாதையர் தொட்டு, இன்று வரை நாங்கள் வேளாண்மை பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகிறோம். இன்றும் சிறுபோக விவசாய செய்கையில் ஈடுபடுகிறோம். குறித்த விவசாய காணிகளை தனியார் நிறுவனம் ஒன்று கையகப்படுத்தப்படுவதற்கு முயல்கின்றது" எனத் தெரிவித்தே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, 'எங்கள் வயல் காணிகளை அபகரிக்காதே'; 'விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்', 'பல ஆண்டுகள் செய்து வந்த காணிகள்

**எங்கள் மூதாதையர் தொட்டு, இன்று வரை நாங்கள் வேளாண்மை செய்கையில் ஈடுபட்டு வருகிறோம். எங்கள் நிலத்துக்குப் பதிலாக எமக்கு மாற்று நிலங்கள் தேவை இல்லை**

எங்களுக்கே உரியன', 'சோலார் பவர் எமக்கு வேண்டாம்' போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு, கோசங்களை எழுப்பிய விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த விவசாயிகள், " இது எங்கள் நிலம்; எங்களுக்கு சோலார் மின்சாரம் வேண்டாம். எங்கள் நிலத்துக்குப் பதிலாக எமக்கு மாற்று நிலங்கள் தேவை இல்லை" என்று கூறினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது.




# மகனின் கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்ட தந்தை பலி

ரீ.எல் ஜவ்பர்கான்

மகனின் கிரிக்கெட் மட்டடையால் கடுமையாகத் தாக்கப்பட்ட தந்தை பலியான சம்பவம், காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக 32 வயதுடைய மகன் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி, கிரிகெட் மட்டையால், மகன் கடுமையாகத் தாக்கியதாக, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில், குறித்த தந்தை முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர், கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் மனைவியுடன் தங்கியுள்ளார். 18ஆம் திகதி, அவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், 21ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து, தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ் அப்துர் றஹீம் தெரிவித்தார். பலியானவர் 65 வயதுடைய கடுசப்பிள்ளை கருணாகரன் என்ற ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் ஆவார்.

உணவகத்துக்கு மன்னார் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு:

# எலி மொய்த்த உணவுகள்

மன்னார் நிருபர்

மன்னார் நகரில் பிரபல உணவு விற்பனை நிலையத்தில், எலி மொய்த்த உணவுகள் களஞ்சியப்படுத்தியும் விற்பனைக்காக வைத்திருந்த நிலையில் குறித்த உணவகத்துக்கு எதிராக நேற்று முன்தினம் (22) மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணினையால், மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

உணவுகள் மேல் எலிகள் பாய்ந்து ஓடும் வீடியோ காணொளியை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு பாவனையாளர் ஒருவரால் அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிக்கு விடுக்கப்பட்ட பணிப்புரையின் பேரில் குறித்த உணவு கையாளும் நிறுவனம், செவ்வாய்க்கிழமை (21) மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது சுகாதாரமற்ற முறையில், உணவு கையாளப்பட்டமமை கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, உணவகத்துக்கு எதிராக 5 குற்றச்சாட்டுகள் முறையிடப்பட்டன.

அதற்கமைவாக குறித்த உணவக உரிமையாளருக்கு 70,000 ரூபாய் தண்ட பணம் செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் மூன்று மாதம் சிறை தண்டனையும் 29.03.2023 வரை வியாபாரத்தை தடை செய்தும் நீதவான் நீதி மன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் மணல் ஏல விற்பனை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் அரசுடைமையாக்கப்பட்ட மணல், ஏல விற்பனை இன்று (24) காலை 9 மணிக்கு ஏலத்தில் விடப்பட உள்ளதாகவும் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணிநேரத்துக்கு முன்னர் பார்வையிட முடியும் என்று நீதி மன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# தெய்வமணி அறக்கட்டளையால் சைக்கிள் அன்பளிப்பு



மன்னார் நிருபர்

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கள்ளியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டு விழா, பாடசாலையின் அதிபர் திருமதி எஸ். வெலிச்சோர் தலைமையில் நேற்று முன்திம் (22) நடைபெற்றது.

மாணவன் டெஸ்மன் டினுசாந்த்துக்கு லண்டன் தெய்வமணி அறக்கட்டளையால் சைக்கிளும் சிறப்பான புள்ளிகளை பெற்ற மேலும் இரு மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய் அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

இவ் விழாவின் பிரதம விருந்தினராக மடு வலய கல்வி பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி திருமதி வாசுகி சுதாகரும் சிறப்பு விருந்தினர்களாக மடு வலய ஆரம்ப கல்வி அதிகாரி எஸ். செல்ரன் யூடிற், மாந்தை மேற்கு கோட்டக்கல்வி அதிகாரி ஜீ. அந்தோனிப்பிள்ளை, கள்ளியடி கற்பக விநாயகர் ஆலய தலைவர் தெய்வமணி அறக்கட்டளை நிறுவனர் வி. முத்துலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்,

# நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் நாளை மருத்துவமுகாம்

நிதர்சன் வினோத்

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ குழாமினரால் தீவகப் பிரதேசங்களில் நடமாடும் மருத்துவ சேவையை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் நாளை (25) மருத்துவமுகாம் நடைபெறவுள்ளது. இதில், யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், துறைசார் வைத்திய அதிகாரிகள், சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

**இந்த மருத்துவமுகாமில் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களை இனங்காணும் பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன**

இம் மருத்துவமுகாமில் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களை இனங்காணும் பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன. எனவே, நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மேற்படி மருத்துவமுகாமில் பங்குபற்றி பயன்பெறுமாறு, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் மாபெரும் தொழிற்சந்தை

சுப்பிரமணியம் பாஸ்கரன்



மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம், கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்திப் பிரிவு, கிளிநொச்சி மாவட்டச் செயலகம் என்பவை இணைந்து YouLead செயற்திட்டத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு நேற்று (23) கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம் 2 ல் சிறப்புற முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ( காணி) ந. திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விருந்தினராக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் கலந்து சிறப்பித்திருந்தார்.

இந்நிகழ்வில் அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் வாய்ப்பை வழங்கும் பொருட்டு தமது செயற்பாடுகள் தொடர்பான விடயங்களையும் தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளையும் தொழில் தேடுனர்களுக்கு வழங்கியிருந்தார்கள்.



# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு மருத்துவ உதவிகள்

செந்தூரன் பிரதீபன்

செல்வச் சன்னதி ஆசிரமத்தின் மோகன் சுவாமி, மற்றும் அவரது குழுவின் ஏற்பாட்டில் மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் இந்த மருந்து பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.



குறித்த மருந்து பொருட்கள் சிறுவர்களுக்கான, அத்தியாவசிய மருந்து பொருட்களைக் கொண்ட, மூன்று இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் பெறுமதியானவையாகும்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு

# மன்னார் சௌத்பார் கிராமத்தில் விழிப்புணர்வு

மன்னார் நிருபர்

உலக நீர் தினத்தை முன்னிட்டு மன்னார் கறிராஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினால் மிசறியோ நிதியுதவியில் நீண்ட நாள்களாக மன்னார் சௌத்பார் கிராமத்தில் பாவனையற்று இருந்த பொதுக்கிணறு புனரமைப்புச் செய்யப்பட்டு புதன்கிழமை (22) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நீர் தினத்தின் முக்கியத்துவம், தற்கால நீரின் சவால் போன்ற விடயங்களை உணர்த்தும் முகமாக கவனயீர்ப்பு ஊர்வலமும், கருத்தமர்வும் நடைபெற்றது.

குறித்த நிகழ்விற்கு கறிராஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை அன்ரன் அடிகளார், தேசிய நீர் வடிகாலமைப்பு சபையின் தொழில்நுட்ப உதவியாளர் பாலசிங்கம் தயாபரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.றெஜிவோல்ரன், வன திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் அருண்ராஜ், வனவிலங்கு திணைக்கள அதிகாரி ரிசர ஹம்புகே, சௌத்பார் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.








## இராஜாங்க அமைச்சரின் ஏற்பாட்டில் மனையியல் பாட செயலமர்வு

கல்வி பொது தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகியவற்றில் மனையியல் பாடத்தை பயிலும் மாணவர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும் 3 நாள்கள் செயலமர்வு நடத்தப்பட்டன.

பசறை தமிழ் தேசிய பாடசாலையில் 20 ஆம் திகதியும், 21ஆம் திகதி சரஸ்வதி தேசிய பாடசாலையிலும், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் 22ஆம் திகதியும் நடைபெற்றன.

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க, கல்வி அமைச்சின் தொழில்நுட்பவியல் பிரிவு நெஸ்ட்லே நிறுவனத்துடன் இணைந்தே இந்தச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

இச்செயலமர்வுகளில் பல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்களும், துறைசார் ஆசிரியைகளும் கலந்து பயனடைந்தனர். அத்தோடு போட்டியில் தெரிவான 50க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசில்களும், துறைசார் ஆசிரியர்களுக்கு வழிகாட்டி நூல்களும், மூன்று பாடசாலைகளுக்கும் எரிவாயு அடுப்புகளும் வழங்கப்பட்டன.

கல்வியமைச்சின் ஊடாக மலையக பாடசாலைகளில் இவ்வாறான செயலமர்வுகள் மேற்கொள்ளபட்டமை இதுவே முதல் தடவையாகும்.

அத்தோடு நானுஓயா நாவலர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று (23) நடைபெற்றது. ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியிலும் இன்று (24) நடைபெறவிருக்கின்றது.

இச் செயலமர்வு மலையகத்தின் ஏனைய பிரதேங்களுக்கும் விரிவுப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது என கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.





அக்கரப்பத்தனை, லிந்துலை, டயன்சில்

# மினி சூறாவளி கூரைகள் பறந்தன

### 58 வீடுகள் பாதிப்பு; பலரும் நிர்க்கதி

■ எஸ்.சதீஸ், துவாரகஷான், பி.கேதீஸ்

அக்கரப்பத்தனை, லிந்துலை, பொகவந்தலாவை- டயன்சில் ஆகிய பிரதேசங்களை ஊடறுத்து வீசிய மினி சூறாவளியால், சிறிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன் லயன் அறைகள் மற்றும் வீடுகளின் கூரைகள் காற்றில் அள்ளுண்டு சென்றுள்ளன.

அடைமழையுடன் கூடிய கடுங்காற்று வீசியதால், லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லிப்பக்கலை, கிளனிகல்ஸ் ஆகிய தோட்டங்களில் 32 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

லிப்பக்கலை தோட்டத்தில் மரம் முறிந்து விழுந்துள்ளது. கிளனிகல்ஸ் தோட்டத்தில் பாதிக்கப்பட்ட 27 குடும்பங்கள் தோட்ட கோவிலிலும், லிப்பக்கலை தோட்டத்தில் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளன.

பொகவந்தலாவை- டயன்சின் தோட்டத்தில் புதன்கிழமை (22) மாலை காற்றுடன் கூடிய பலத்த மழை காரணமாக டயன்சின் தோட்டத்தில் 15ம் இலக்க தொடர் லயன் குடியிருப்பு ஒன்றில் 12 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு 15ம் இலக்க லயன் குடியிருப்பு தாழ் இறங்கியுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் ரெிவித்தனர். இதில் 15ம் இலக்க லயன் குடியிருப்பில் 12 வீடுகளும் தொழிற்சாலை பகுதியில் இரண்டு வீடுகள் உட்பட 14 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

இதனால் குடியிருப்பில் வசித்து வந்த மக்களின் உபகரணங்கள் சில சேதமடைந்து உள்ளதாகவும் இதில் 14 குடும்பங்களை சேர்ந்த 61 பேரும் தோட்டத்தில் உள்ள சிறுவர் பாராமரிப்பு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு உள்ளனர் என பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார் .

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு கிராம உத்தியோகஸ்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நிலையில், அக்கரப்பத்தனை பிரதேசத்தில் புதன்கிழமை (22) காற்றுடன் கூடிய கனமழை







பெய்ததன் காரணமாக லிந்துலை சென் கிலாஸ் தோட்டத்தில் எட்டு வீடுகள் சேதமாகியுள்ளன.

இதில் பாதிக்கப்பட்ட 35 பேர் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த வீடுகளில் இருந்த பாடசாலை மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள், சமையல் பொருட்கள் என அதிகமான பொருட்கள் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிணற்றில் விழுந்து தந்தை பலி

■ சுமணசிறி குணத்திலக்க

மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பட்டியலந்த பிரதேசத்தில் ஐந்து பிள்ளைகளின் தந்தையொருவர் கிணற்றுக்குள் தவறிவிழுந்து மரணமடைந்துள்ளார்.

வீட்டுத் தோட்டத்திலுள்ள கிணற்றில் விழுந்தே அவர் மரணமடைந்துள்ளார்.

85 வயதான இவர், வீட்டுத்தோட்டத்தில் பாதுகாப்பு வேலிகள் இல்லாத கிணற்றிலேயே விழுந்து மரணமடைந்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## ஆற்றிலிருந்து சிசுவின் சடலம் கண்டெடுப்பு



■ ரஞ்சித் ராஜபக்ஷ, எம்.கிருஸ்ணா

பொகவந்தலாவை, லொய்னோன் கெசல்கமுவ ஓயாவில் இருந்து பெண் சிசுவின் சடலம் புதன்கிழமை (22) மீட்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

மரக்கறித் தோட்டத்தில்வேலை செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் சிசுவின் சடலம் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டு பொகவந்தலாவை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்துள்ளனர்.

குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்ட தடயவியல் பொலிஸார் ஹட்டன் நீதிமன்ற நீதவானின் பணிப்புரைக்கு அமைய கெசல்கமுவ ஓயாவில் இருந்து சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் .

இவ்வாறு மீட்கப்பட்ட சிசு ஏழு மாதங்களுக்கு முன்னர் பிறந்த குழந்தையென ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட சிசுவின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பூர்த்தி செய்து வெளியேறினார்

■ ஏ.எம்.ஜலீல்



உக்குவளை குரீவெலயைச் சேர்ந்த எம்.எஸ்.எம். பர்வின் கொழும்பு பல்கலைகழகத்தில் நான்கு வருடம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பை (Master of Business Administration General Managment) முடித்துள்ளதுடன் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மூன்று வருடம் பட்டய கணக்காளர் பாடநெறியையும் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளார்.

இவர், இலங்கை மட்டுமன்றி இந்தியா, மலேசிய நாடுகளிலுமுள்ள பல்கலைகழகங்களில் இப்பாடநெறிகளின் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது

உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரியில் கல்வி பயின்ற இவர் இதே ஊரில் வசித்துவரும் திருமதி சஹருல் புவைஸா, காலஞ்சென்ற சலாகுதீன் ஆகியோரது புதல்வராவார்.

## ‘நம்மிடம் இருந்து நமக்கே காய்கறிகள்’

■ எஸ்.கே.குமார்



நுவரெலியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு சமச்சீர் உணவுத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்கும். ‘நம்மிடம் இருந்து நமக்கே காய்கறிகள்’ என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றுமொரு கட்டம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று (23) இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், அதிகாரிகள் தமக்கு தேவையான பழங்கள் மற்றும் மரக்கறிகளை மானியத் தொகையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தமக்குத் தேவையான பழங்கள், மரக்கறிகளை பெற்றுக்கொண்டு உரிய தொகையை செலுத்தினர்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி சுஜிவா போதிமான உட்பட மாவட்ட செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர். வாரத்தில் ஒரு நாள் இந்த நிகழ்ச்சியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆலங்கட்டி மழையால் கெசல்கமுவ பெருக்கெடுப்பு

### வெள்ளம் கரைபுரண்டது; தாழ்நிலங்கள் பாதிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ





பொகவந்தலாவையில் நீரேந்தும் பிரதேசங்களில் பெய்த அடைமழை மற்றும் ஆலங்கட்டி மழையால், காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீரை ஏந்திச்செல்லும் ஆறுகளில் ஒன்றான கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்து கரைபுரண்டு ஓடியது. இதனால் தாழ்நில பிரதேசங்கள் வெள்ள நீரில் மூழ்கின.

கடந்த சில நாள்களாக பெய்யும் அடைமழை காரணமாக, பொகவந்தலாவை நகரிலுள்ள தாழ்நில பிரதேசங்கள் நீரில் மூழ்கின. அத்துடன், சென்மேரிஸ் கல்லூரியின் சில வகுப்பறைகளுக்குள் வெள்ளநீர் புகுந்து கொண்டது.

பொகவந்தலாவை, கொட்டியாக்கலை பெருந்தோட்டத்தின் கீழ் பிரிவில் வீடுகள் சில வெள்ளநீரில் மூழ்கிவிட்டன. மரக்கறி தோட்டங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

சென்மேரிஸ் கல்லூரியில் வகுப்பறைகள் பல வெள்ளநீரில் மூழ்கியுள்ளமையால், அவ்வாறான வகுப்பறைகளுக்குள் சேற்றுநீர் புகுந்துள்ளது. அவற்றை அகற்றுவதற்காக, அவ்வாறான வகுப்பறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் நேற்றையதினம் விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாயமான 10 ஓட்டோக்கள் பலாங்கொடையில் சிக்கின

■ இரா.யோகேசன்

கினிகத்தேனை, வட்டவளை, நாவலபிட்டி, தெஹியோவிட்ட, எக்கல ஆகிய பிரதேசங்களில் காணாமல்போன ஓட்டோக்களில் 10 ஓட்டோக்கள் பலாங்கொடை பகுதியிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அவ்வாறு மீட்கப்பட்ட ஓட்டோக்களில், கினிகத்தேனை பிரதேசத்துக்கு உரிய 3 ஓட்டோக்களும், நாவலபிட்டி பிரதேசத்தில் இருந்து களவாடப்பட்ட 4 ஓட்டோக்களும் தெஹியோவிட்ட, எக்கல, வட்டவளை ஆகிய பிரதேசங்களில் இருந்து மாயமான தலா ஒவ்வொரு ஓட்டோவும் அடங்குகின்றன.

மேற்படி பிரதேசங்களில் இருந்து காணாமல் போன ஓட்டோக்கள் அனைத்தும் பலாங்கொட பிரதேசத்தில் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் நான்கு சந்தேக நபர்களை கினிகத்தேனை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் ஹட்டன் நீதிவான நீதிமன்றில் கடந்த 21ஆம் திகதி ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்களை தடுப்புகாவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிவான் நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு தற்போது ஓட்டோக்களை ஹட்டன் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கினிகத்தேனை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அரச நிறுவனங்களின் பங்குகள் விற்பனை தொடர்பில் எழுந்துள்ள கேள்விகள்

திங்களன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அரசாங்கத்தின் வசம் காணப்படும் இலாபமீட்டும் நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், அது தொடர்பில் பொதுப் பட்டியலிடப்பட்ட இரண்டு நிறுவனங்களான ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் ஆகியன, இந்தத் தீர்மானத்தை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிட்டுமுள்ளன.

இந்தத் தீர்மானம் தொடர்பில் பலரின் கவனம் திரும்பியுள்ளது. குறிப்பாக, நாடாளுமன்றத்திலும் ஜனாதிபதியின் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தமை பற்றி அறிவிக்கும் உரையைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

அது ஒருபுறமிருக்க, இந்த நிறுவனங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் அவசியமாகின்றது. இவை இரண்டும் பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள். அவற்றின் பெரும்பாண்மை பங்காளராக இலங்கை அரசாங்கம் திகழ்கின்றது. மாறாக, அரசாங்கத்திடம் இந்த நிறுவனங்களின் உரிமம் காணப்படுவதாக கூற முடியாது. சில ஊடகங்கள், இவ்வாறு பொது மக்களை தவறாக திசை திருப்பும் செய்திகளை பிரசுரிக்கின்றமை திருத்திக் கொள்ளப்பட வேண்டும்.

ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் மொத்தப் பங்குகளில் 49.5 சதவீதமானவை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் காணப்படுவதுடன், லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பங்குகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமான பங்குகளை, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது.

இந்தப் பங்குகளை விற்பனை செய்யும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இவற்றை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் மத்திய வைப்புக் கணக்கைக் கொண்டிருக்கும் எவரும், தம்மிடம் நிதி வசதி காணப்பட்டால், கொள்வனவு செய்யலாம்.

எனவே, இந்நிறுவனங்களில் இலங்கை அரசாங்கம் சார்பாகக் காணப்படும் பங்குகளை யாருக்கு கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்படும் எனும் கேள்வி எழுகின்றது. வெளிநாட்டவர் இந்தப் பங்குகளை கொள்வனவு செய்து வைத்திருந்தால், நிறுவனத்தால் வருடாந்தம் வழங்கப்படும் பங்கு இலாபங்களையும், இதர சலுகைகளையும் அவர்கள் தமது நாணயங்களுக்கு மாற்றி பெற்றுக் கொள்வார்கள். இதனால், நாட்டின் டொலர் இருப்பில் அது தாக்கம் செலுத்தும். அத்துடன், நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை தொடர்பில் டெலிகொம் நிறுவனம் அதிகளவு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பதால், எந்தத் தரப்பினருக்கு இந்தப் பங்குகள் வழங்கப்படுகின்றன என்பது தொடர்பில் கவனம் செலுத்துவது சிறந்தது.

எந்தவொரு முதலீட்டாளரும் நட்டமீட்டும் நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு முன்வரமாட்டார்கள். அதுவும் இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடி நிலவும் நாட்டில், நட்டமீட்டி வரும் நிறுவனத்தில் முதலீடு செய்து, இடர்களுக்கு முகங்கொடுக்க விரும்பமாட்டார்கள்.

எனவே, ஸ்ரீ லங்கன் விமான சேவை போன்ற நட்டமீட்டும் நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொள்ள, முதலீட்டாளர்களைக் கவரும் வகையிலான சில தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அரசிடம் காணப்படும் இலாபமீட்டும் மற்றும் நட்டமீட்டும் நிறுவனங்களின் பங்கு விற்பனை தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை எதிர்வரும் நாள்களில் அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk
www.tamilmirror.lk






## வாழ்வியல் தரிசனம்

மௌனம் சௌக்கியம். அதுவே, யௌவனம். இதை ஆட்கொள்வதே பேரானந்தம். பேச்சுகளைச் சுருக்குவது அறிவு வளர்ச்சிக்கு சிறந்தது. அதிகம் பேசினால் பலம் குறையலாம். அளவோடு பேசினால் பேச்சில் கூர்மை வளரும்.

தேவைப்படும் இடங்களில் அளவோடு பேசினால், அதன் அர்த்தத்தின் கூர்மையை கேட்பவர்கள் உணர்வார்கள். அதிவேகத்துடன் பேசினால், அதை விளங்கிக் கொள்வதே மகாசிரமம்.

பொது இடங்களில் பேசும் போது, நல்ல விடயங்களை மனதில் நிறுத்தினால், இனிமையைக் கலந்து, நயம்பட உரை செய்தால், மக்கள் புரிந்து கொள்வார்கள்.

தெரியாத விடயங்களை மேடையில் பேச முற்படக்கூடாது. தெளிவாக உணர்ந்து பேசிட, தொடர்ந்த பயிற்சி தேவையானது.

மொழிவளம், கருத்துகளில் நுணுக்கம் என்பன கேட்போரைக் கவர்ந்திழுக்கும். அழகிய தமிழை விருப்பத்துடன் கற்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 20:

# இலத்தீன் அமெரிக்க அதிவலதின் வரலாறு



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தின் அதிவலதுசாரித்துவத்தின் எழுச்சி என்பது, அதனது வரலாற்றோடு தவிர்க்க இயலாத தொடர்பைக் கொண்டுள்ளது. ஒருவகையில், இலத்தீன் அமெரிக்காவின் அதிவலதுசாரித்துவத்தின் மறுமலர்ச்சி, ஆசியா, ஐரோப்பா முதல் உலகின் பிற நாடுகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளோடு ஒத்துப் போவதாக உள்ளது.

பழைமைவாதிகள், விளிம்புநிலை மக்கள், மையநீரோட்டத்தில் பயணிப்பவர்கள், ஒரு புதிய 'சிலுவைப் போரை'க் காண்கிறார்கள். பாலின சமத்துவம், சமூக நீதி, பண்பாட்டு மார்க்சியம், பொருளாதார அசமத்துவத்தை நீக்கல் ஆகியவற்றை நிராகரிக்கின்றனர். நாம் - அவர்கள் என்ற பிரிகோட்டை உருவக ரீதியிலும் உடலியல் ரீதியாகவும் ஏற்படுத்தி எல்லைகளை அவர்கள் வலுவாக்குகிறார்கள்.

இவற்றின் செல்வாக்கால், ஜனநாயகமாக்கல் தொடர்ச்சியாக பின்னுக்குத் தள்ளப்படுகிறது. இம்முயற்சியில், அதிவலதுசாரிகள் வெற்றிகாணும் போதெல்லாம், சர்வாதிகாரம், நவதாரளவாதத்தோடு இணைந்து, பிற்போக்கு சக்திகளுடன் கைகோர்த்து ஆட்சிகளைக் கைப்பற்றுகின்றன. இந்தப் பொதுவான பண்புகள் உலகளாவிய ரீதியானதாக இருந்தபோதும் கூட, இலத்தீன் அமெரிக்க அதிவலதுசாரித்துவத்தின் பல பண்புகளில், பிராந்தியத்தின் பின்கொலனித்துவ வரலாறு முக்கிய பங்குபெறுகிறது. அவ்வகையில், அவை தனித்துவமானவை.

இலத்தீன் அமெரிக்க அதிவலதுசாரித்துவத்தின் இயங்கியலுக்கு கிறிஸ்துவம், ஆணாதிக்கம், 'ஹிஸ்பானிக்' வெண்மை, சர்வாதிகாரம் (மதச்சார்பின்மை, ஓரினச்சேர்க்கை, பூர்வீகம், கறுப்புத்தன்மை, ஜனநாயகம் ஆகியவற்றை வன்முறையோடு நிராகரிப்பது) என்பன எவ்வாறு இயங்குகின்றன என்பதை விளங்குவது முக்கியமானது.

இது இலத்தீன் அமெரிக்காவின் கொலனித்துவ நீக்கம் எவ்வாறு வெளிப்பட்டது என்பதையும் அதன் முன்னாள் கொலனித்துவத்துடன் (ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல்) அதன் உறவுகளின் தன்மையை, எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதையும் விளங்கிக் கொள்ள உதவும்.

இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதலிருந்தே 'இஸ்லாமோஃபோபியா'வை வலுப்படுத்தப் பயன்படுத்தப்படும் வலதுசாரிகளின் அரசியல் கதையாடல்கள், அமெரிக்காவில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. ஆனால், இலத்தீன் அமெரிக்காவில் இத்தகைய சொல்லாட்சிகள் புதிதல்ல. இது நீண்டகாலமாகவே அதிவலதுசாரித்துவத்தின் அறிவார்ந்த நீரோட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இது, ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துடன் இனவாத அடையாளத்தால் வகைப்படுத்தப்படுகிறது. 1930களில் இருந்து, அது 'கம்யூனிஸ்ட்'களுக்கு எதிரான வன்முறை பிரசாரங்களுக்கான மத நியாயங்களையும் வலுப்படுத்தியுள்ளது.

இப்போதைய அதிவலதுசாரித்துவத்தை நோக்கிய திருப்பத்தை, 1930களில் உருவான உலகளாவிய பாசிசத்துடன் ஒப்பிடவியலுமா என்பது விவாதத்துக்கு உரியது. ஆனால், இன்றைய நிலைமைகள் பல வழிகளில் 1930 காலகட்டத்தை ஒத்ததாகவே இருக்கின்றன. இருப்பினும், இலத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில் அத்தகைய தருணங்களுக்கு இணைப்புகளை வரைவதானது, ஒப்புமைப்படுத்துவதற்கு மாறாக, வரலாற்று தொடர்ச்சிகளை வரைபடமாக்குவதற்கே உதவும்.

இலத்தீன் அமெரிக்க நாடுகள், ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளை விட முன்னதாகவே - வேறுபட்ட சூழ்நிலைகளில், ஐரோப்பிய கொலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரத்தை வென்றன. ஐபீரிய சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்திய பொருளாதார, இனப்பண்பாட்டுப் படிநிலைகளை மாற்றுவதற்குப் பதிலாக, இலத்தீன் அமெரிக்காவின் 19ஆம் நூற்றாண்டு கிளர்ச்சியாளர்கள் அவற்றைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

அவர்களின் குறிக்கோள், ஆழமான சமத்துவமற்ற நிலையை சிதைப்பது அல்ல; ஆனால், மிகவும் அடக்கமாக, அதன் அமலாக்குபவர்களாக தங்களை நிறுவிக் கொள்வதாகும். அவர்கள் வென்ற புரட்சிகள், தங்களை அதிகாரத்துக்கு கொண்டு வருவது பற்றியவையேயன்றி, சமூக மாற்றத்தை நோக்காகக் கொண்டவை அல்ல!

இதையே இத்தாலிச் சிந்தனையாளர் அந்தோனியோ கிராம்சி, 'செயலற்றவை' என்று குறிப்பிடுகிறார். தொலைதூர தீபகற்ப முடியாட்சிகளுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, கிரியோல்ஸ் என்று அழைக்கப்படும் ஐரோப்பிய கொலனித்துவவாதிகளின் வழித்தோன்றலாக இலத்தீன் அமெரிக்காவில் பிறந்த சந்ததியினர் தம்மைத் தாமே ஆண்டனர். அவர்கள், கொலனித்துவ மேலாண்மையை தாம் பேணுவதற்கு வழிசெய்யும் வகையில், புதிய தேச அரசுகளில் அரசியலமைப்பு மற்றும் சட்ட கட்டமைப்பை நிறுவினர்.

கொலனியாதிக்கத்தில் இருந்து விடுதலையடைந்த பின்னர், ஆட்சிக்கு வந்தவர்களிடையே ஆட்சியை முன்னெடுப்பதில் கருத்தொற்றுமை இருக்கவில்லை. இது எந்தக் கொலனித்துவ கால நிறுவனங்களின் நடைமுறைகளை வைத்திருப்பது, எதைப் புதுப்பிப்பது, எதை நிராகரிப்பது என்பதில் கசப்பான மோதல்களை உருவாக்கியது.

சிலர் தங்கள் முன்னாள் கொலனித்துவவாதிகளுடன் நெருங்கிய உறவுகளைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பினர். மற்றவர்கள், அறிவொளி தாராளவாதத்தால் ஈர்க்கப்பட்டு, தூய்மையான இடைவெளியை விரும்பினர். ஆட்சியாளர்கள் இவ்வாறு முரண்பட்டுக் கொண்டிருந்தாலும், இந்நாடுகளின் உயரடுக்கினரிடையே ஓர் ஒற்றுமை இருந்தது. அது கட்டற்ற சுரண்டலையும் செல்வம் சேர்ப்பதையும் அடிப்படையாகக் கொண்டது.

இந்த எண்ணம், பிராந்திய ரீதியாகவே உயரடுக்கினரின் பொதுப்பண்பாக இருந்தது. கொலனித்துவக் கட்டமைப்பில் ஆட்சியாளர்கள், மாற்றங்களை விரும்பினாலும் உயரடுக்கின் கருத்தொற்றுமையால் எதுவித மாற்றமும் நிகழ அனுமதிக்கப்படவில்லை. கொலனித்துவ கட்டமைப்புகளுடனேயே பின்கொலனிய அரசாங்கங்கள் செயற்பட்டன.

சாதி அமைப்பொன்று நடைமுறையில் இருந்தது. அதில் அவர்களின் தோல் நிறம், கத்தோலிக்க நம்பிக்கை, பரம்பரை, மொழி ஆகியவற்றால் ஐரோப்பிய சந்ததியினர் என்று அடையாளம் காணக்கூடியவர்கள், சமூகக் கட்டமைப்பின் மேல் அமர்ந்து தங்கள் மேலாதிக்கத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைக் கண்காணித்தனர்.

இந்த அச்சுறுத்தல்களில் அந்தீஸ் பகுதியில் ஏற்பட்ட பழங்குடிகளின் எழுச்சி, ஹெயிட்டியில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி என்பன முக்கியமானவை. கிரியோல்ஸ் நேரடியான ஐபீரிய ஆட்சியை நிராகரித்தாலும் 'ஐபீரியன்' எனப்படும் மேன்மையை தொடர்ந்து நிலைநிறுத்தினார். அப்பட்டமாக இனரீதியாக அடுக்கடுக்கான பின் கொலனித்துவ சமூகங்களில், கிரியோல்களின் அரசியல் அதிகாரம், ஐரோப்பிய மரபுரிமைக்கான அவர்களின் உரிமைகோரல்களில் துல்லியமாக இருந்தது.

இந்த ஒழுங்குக்கு எதிரான சவால்கள் தவிர்க்க முடியாமல் வெளிப்பட்டபோது, அந்த ஆட்சியின் பயனாளிகள் மத்தியில் ஏகாதிபத்திய கால ஏக்கத்தை அவை தூண்டிவிட்டன. அவர்கள் முழுமையான வெளிநாட்டு ஆதிக்கத்தை விரும்பாவிட்டாலும்; முன்னாள் கொலனித்துவ திட்டங்கள் நிறுவிய விதிமுறைகள் மற்றும் மதிப்பு அமைப்புகளை பராமரிப்பதற்கு விரும்பினர்.

இலத்தீன் அமெரிக்காவில், அந்த ஏக்கத்தின் மிகவும் புலப்படும் வெளிப்பாடு 'ஹிஸ்பானிடாட்' அல்லது 'ஸ்பானிஷ்' என்ற கருத்தாகும். ஸ்பானிஷ் மொழி மற்றும் ஹிஸ்பானிக் கலாசாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள், நாடுகள் மற்றும் சமூகங்களின் குழுவானது 'ஹிஸ்பானிடாட்' என்று அழைக்கப்படுகிறது.

ஹிஸ்பானிடாட்டின் பழைமைவாத ஆதரவாளர்கள், உலகின் ஸ்பானிஷ் மொழி பேசும் சமூகங்கள், அவர்களின் பொதுவான கொலனித்துவ அனுபவத்திலிருந்து உருவான கலாசார, ஆன்மீக அடித்தளங்களை பகிர்ந்து கொண்டனர். இது அட்லாண்டிக் கடல்கடந்த குடும்பத்தை உருவாக்கியது. (பிரேசிலில், லூசோ-பிரேசிலிய தேசியவாதிகள், போர்த்துக்கல் உடனான உறவை மையப்படுத்தினர். ஆப்ரோ-சந்ததி அல்லது பழங்குடியினரின் தன்மையைக் காட்டிலும் தாங்கள் ஐரோப்பியர்கள் என்று வாதிட்டனர்.)

இந்த ஹிஸ்பானிக் குடும்பம் ஒரு தனித்துவமான இனம். இது காஸ்டிலியன் ஸ்பானிஷ் மற்றும் கத்தோலிக்க நம்பிக்கையில் இருந்து உருவான ஒரு ரசவாதமாக மத வெற்றியாலும் பொற்கால ஏகாதிபத்திய விரிவாக்கத்தாலும் உருவாக்கப்பட்டது.

இந்தக் கடைசி பகுதி முக்கியமானது: ஸ்பெயின் தன் இருப்புக்கு மீள்வெற்றிகாணலுக்குக் கடன்பட்டுள்ளது. ஏனெனில், ஆரம்பகால நவீன கிறிஸ்தவ இராஜ்யங்களான காஸ்டிலும் அரகோனினும் முஸ்லிம் கலிபாவை தோற்கடித்து, ஐபீரிய தீபகற்பத்தில் இருந்து முஸ்லிம்களையும் யூதர்களையும் விரட்டினார்கள். இது, 1492இல் முஸ்லிம்களுக்கு எதிரான மீள்வெற்றிகாணலாகும். இந்த மீள்வெற்றிகாணல் என்ற கருத்தாக்கம் சிலுவைப்போர், புனிதப்போர் என்பதன் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்ட கதையாடலாகும்.

இந்த மீள்வெற்றிகாணல் நிகழ்ந்த அதே ஆண்டில், தற்செயலாக பஹாமாஸில் கிறிஸ்டோபர் கொலம்பஸின் எதிர்பாராத தரையிறங்கல் நிகழ்ந்தது. இரண்டும் ஒருங்கே குடியேறிய கொலனித்துவம், சுவிசேஷப் பணி, வெள்ளைநிற மேன்மை, நவீன ஐபீரியாவின் தேசியஅரசுகளின் தோற்றம் ஆகியவற்றைச் செய்து முடித்தன.

இவை அனைத்தும் இனவெறியோடு மற்றவர்களை வெளியேற்றுதல், ஒழித்தல் அல்லது ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் பிரிக்கமுடியாத வகையில் ஏகாதிபத்திய விரிவாக்கமும் மதமும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

இந்தப் பின்புலத்திலேயே இலத்தீன் அமெரிக்கா சுதந்திரத்தின் விடியலை சுவாசித்தபோது, தங்களை ஐபீரியத் தன்மையை மரபுரிமையாகச் சொந்தம் கொண்டாடுபவர்களாக அடையாளம் கண்ட கிரியோல்களும் அந்தக் கருத்தியலோடே சுதந்திர நாடுகளில் இணைந்தனர்.

இந்த வரலாற்றுப் பின்புலம் இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தில் அதிவலதின் வரலாற்றைப் புரிந்து கொள்ள அவசியமானது. கொலனியாதிக்க விடுதலையானது, புதிய அடக்குமுறையாளர்களை கொண்டு வந்தது, செல்வந்தர்களின் நலன்களுக்கு எதுவித பங்கமும் விளையவில்லை.

புதிதாக தோற்றம் பெற்ற கிரியோல்கள் தங்களை மேன்மையானவர்களாக் கண்டனர். இது நிறவெறி, இனத்துவ ஆதிக்கம், கிறிஸ்தவ மத மேலாண்மை என்பவை அடிப்படையாகக் கொண்டது. இவையே பின்னர் அதிவலதுசாரிகளின் பிரதான ஆயுதங்களாகின.

## கடிதங்கள்

### 45 வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாத வீதி



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வலைப்பாடு, வேரவில், பொன்னாவெளி, பாலாவி, கிராஞ்சி, சிவபுரம் போன்ற கிராமங்களுக்கான ஒரே ஒரு பாதையாகக் காணப்படுகின்ற பல்லவராயன் கட்டு சந்தி, வேரவில் வரையான சுமார் ஆறு கிலோ மீற்றர் வரையான வீதி, 45 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில், 2020ஆம் ஆண்டில் 'ஐ றோட்' திட்டத்தின் கீழ் குறித்த வீதி புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டு, புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் அதன் புனரமைப்பு பணிகள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன.

குறித்த வீதி, நிரந்தரமாக புனரமைக்கப்படாத நிலையில், இங்குள்ள மக்கள் போக்குவரத்தில் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். குறிப்பாக, வேரவில் வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் சென்று வருவதற்கும் அங்கிருந்து அவசர நோயாளிகளை முழங்காவில் வைத்தியசாலைகோ, கிளிநொச்சி வைத்தியசாலைக்கோ கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நோயாளிகள் பலர், இடைநடுவில் உயிரிழந்துள்ளதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

புனரமைப்பு பணிகள் கைவிடப்பட்டு உள்ளதால் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக, இவ்வீதியின் மூன்று இடங்களில் வெள்ள நீர் குறுக்கறுத்து பாய்ந்ததுடன், நீண்ட நாள்களுக்கு வெள்ளமும் தேங்கிக் காணப்படும். எனவே, கைவிடப்பட்ட வீதி புனரமைப்புப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு குறித்த கிராமங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

– யது பாஸ்கரன்

SLT–MOBITEL Enterprise இனால்

# MSMEகளுக்கு வலுவூட்டல்

நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு தமது வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்திக் கொள்ளவும், டிஜிட்டல் செயற்பாடுகளில் புதிய அம்சங்களை உள்வாங்கிக் கொள்வதற்கு வலுவூட்டும் வகையிலும், SLT-MOBITEL Enterprise இனால், பரிபூரண மற்றும் புத்தாக்கமான தீர்வுகளான Bizlife packages, SLTM DataOne மற்றும் Hosting Cub போன்றன அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வு கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க அடங்கலாக SLT-MOBITEL சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் சிலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் உரிமையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததுடன், தமது வியாபாரச் செயற்பாடுகளுக்கு இந்த புதிய தீர்வுகளினூடாக வழங்கப்படும் வாய்ப்புகள் மற்றும் வசதிகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும், வியாபார வளர்ச்சிக்கு அவை எவ்வாறு உதவிகளை வழங்குகின்றன என்பதை அறிந்து கொள்ளவும் உதவியாக அமைந்திருந்தது. BizLife packages இனால் வாடிக்கையாளர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேவைகளுக்கு பொருத்தமான பல்வேறு தீர்வுகள் வழங்கப்படுகின்றன. SLTM DataOne இனால், தனி நிறுவனத்தின் சகல கிளைகள் அல்லது பிரிவுகளையும் உள்வாங்கி மொத்தமான டேட்டா வசதிகளும் வழங்கப்படுகின்றது. Hosting Cub facility இனால், நிறுவனத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பகிரப்பட்ட மற்றும் VSP பதிவிடல் போன்றன சகாயமான விலைக்கு வழங்கப்படுகின்றன.

தேசிய கிரிக்கெட் அணிக்கு

# கொமர்ஷல் வங்கி அனுசரணை

நியுசிலாந்தில் தற்போது நடைபெற்று வரும் இலங்கை அணி பங்கேற்கும் ஒருநாள் மற்றும் T20 கிரிக்கெட் போட்டிகளின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்களில் ஒருவராக கொமர்ஷல் வங்கி இடம் பிடித்துள்ளது.

'இலங்கையில் மிகவும் பின்பற்றப்படும் ஒரு விளையாட்டாக கிரிக்கெட் திகழ்கின்றது. இலங்கை தேசிய கிரிக்கெட் அணி மீது பற்று கொண்டவர்களாகவே பெரும்பாலும் ஒவ்வொரு இலங்கையரும் உள்ளனர்' என்று வங்கியின் வாடிக்கையாளர் சேவைப்பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க கூறினார். "இலங்கை தேசிய கிரிக்கெட் அணியுடன் நேரடியாக இணைந்து கொள்வது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றது. இதுவரை முக்கியமான முன்னணி வர்த்தக முத்திரைகளால் மட்டுமே இது சாத்தியமாகி உள்ளது. அந்த வகையில் நாட்டின் முன்னணி வர்த்தக முத்திரை என்ற வகையில் கொமர்ஷல் வங்கி நியுசிலாந்தில் இலங்கை அணி விளையாடும் ஒரு நாள் மற்றும் T20 போட்டிகளின்




கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர் சேவைப்பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க (வலது) இலங்கை கிரிக்கெட்டின் சந்தைப்படுத்தல் பிரிவு தலைவர் உபுல் நவரட்ண பண்டார ஆகியோர் இந்தப் பங்குடைமை பற்றி அறிவிப்பதைப் படத்தில் காணலாம்.

போது இந்த பொறுப்பை ஏற்றுள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

நியுசிலாந்துக்கு இலங்கை அணி மேற்கொண்டுள்ள சுற்றுலா இரண்டு டெஸ்ட் போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், மூன்று T20 போட்டிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி கிறைஸ் சேர்ச்சில் முதலாவது டெஸ்ட் போட்டியுடன் சுற்றுலா ஆரம்பமானது. இந்த டெஸ்ட் போட்டிகள் சர்வதேச கிரிக்கெட் கழகத்தின் (ICC) 2021-23 காலப்பகுதிக்கான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் ஒரு அங்கமாகும். மூன்று 50 ஓவர் ஒருநாள் போட்டிகள் 2023 ICC ஆண்கள் ஒரு நாள் உலகக் கிண்ண சுபர் லீக் போட்டிகளோடு தொடர்புடையது.

SLT–MOBITEL Enterprise Data One இடமிருந்து

# MSMEகளுக்கு தீர்வு

நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு (MSMEs), தமது சகல கிளைகளையும் இணைத்துக் கொள்ளக்கூடிய தங்கியிருக்கக்கூடிய ஒற்றை புரோட்பான்ட் இணைப்புத் தீர்வுகளை வழங்கும் வகையில், SLT-MOBITEL Enterprise தனது புதிய 'Data One' தீர்வை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.

Data One இனால், MSME வியாபாரங்களின் சகல கிளைகளையும் உள்வாங்கி ஒற்றை புரோட்பான்ட் இணைப்புப் பக்கேஜ் வழங்கப்படுகின்றது.

Data One இன் உள்ளம்சங்களில், anytime data வழங்கல்கள், data பாவனையை கண்காணிப்பதற்கு நிறுவனத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதி, data bucket ஐ நிர்வகிப்பது மற்றும் ஒவ்வொரு கிளைகளுக்கும் ஆணுகுவதற்கு data ஒதுக்கீட்டை நிர்வகிக்கும் வசதியையும் வழங்குகின்றது. வியாபாரத்தின் data கேள்விகளின் அடிப்படையில், கோரிக்கையின் பிரகாரம் extra GB கிடைப்பதுடன், மேலதிக data க்கு நியமக் கட்டண அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது. SLT-MOBITEL இனால் நியமக் கட்டண அறவீட்டின் பிரகாரம் Static IP வழங்கப்படுகின்றது.

சிறிய அல்லது பாரியளவு MSMEகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், SLT-MOBITEL இனால், அதன் Data One பாவனையாளர்களுக்கு கவர்ச்சிகரமான பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. New-born, Start-up, Grow, Explore, Energized, Redefine, Astonish, மற்றும் Enterprise ஆகிய பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன. இந்த பக்கேஜ்களுக்கான




Anytime GB அளவு 100-5000 GB வரையில் காணப்படுகின்றது. ஆகக்குறைந்தது ரூ. 4,500 முதல் ஆகக்கூடியது ரூ. 165,000 வரையில் அமைந்துள்ளது. கிளைகளின் எண்ணிக்கையும் ஆகக்குறைந்தது 4 முதல் 40 வரை காணப்படுகின்றது. கிளை ஒன்றுக்கான Data One மாதாந்த பக்கேஜ் பெறுமதி ரூ. 100 ஆக மாத்திரம் அமைந்துள்ளது.

திருக்கோணமலை பத்திரகாளி அம்மனின்

# தொன்மையும் அற்புதங்களும்



சுந்தரலிங்கம் சிவசங்கரன்

காளியாச்சி என அன்போடும் உரிமையோடும் இலங்கைவாழ் மக்களால் உறவாடப்படும் திருக்கோணமலை பத்திரகாளியம்மை தொன்மையும் மகிமையும் வாய்ந்தவள் ஆவாள். திருக்கோணேஸ்வரப் பெருமானை கண்கெட்டாது பார்த்தவாறு திருக்கோணமலை நகரின் மத்தியில் பத்திரகாளி அம்மை வீற்றிருக்கின்றாள்.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து கோணமாமலையமர்ந்த எம்பெருமான் அருளாட்சி நல்கும் தெய்வப்பதி திருக்கோணமலையாகும். யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சி. பத்மநாதன் போன்ற வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்களின் பிரகாரம், ஈழத்தமிழர்களின் பண்பாட்டுத் தொன்மங்களும், அவர்களின் வழிபாட்டு மூலாதாரங்களும் வேறெங்கிலும் இல்லாதவாறு படிமமாக, வரலாற்றுச் சிதிலங்களாக புதைந்து கிடப்பது இப்பூமியிலாகும். சைவத்துடன் சக்தி வழிபாட்டு மரபும் தொன்றுதொட்டு இயங்கியிருப்பதை இங்கு காணப்படும் பல தொன்மையான சக்தி ஆலயங்கள், கல்வெட்டுக்கள், புராணங்கள் மூலம் காணக் கிடைக்கிறது.

பிற்காலச் சோழர்களின் எழுச்சிக் காலப்பகுதியில் திருக்கோணமலை அவர்களின் ஆட்சிப் பிரதேசமாக இருந்து வந்தது. ஏறத்தாள கி.பி. 11ம் நூற்றாண்டளவில் திருக்கோணமலையில் தமிழர்களின் பண்பாடு, வழிபாட்டு வழக்கங்கள், நல்லாட்சி என சிறப்புற்று விளங்கி இருந்திருக்கின்றன. விஜயாலச் சோழனுடன் தொடங்கிய பிற்காலச் சோழர்கள், போரியல், வாழ்வியல் என தமது இருபெரும் கூறுகளிலும் பத்திரகாளியின் நிசும்பசூதன மூர்த்தத்தை தமது பெருந்தெய்வமாக போற்றியிருக்கிறார்கள்.

மாமன்னர் இராசேந்திர சோழனின் ஆதிக்கத்தின் கீழ் இலங்கை உட்பட்டிருந்த காலப்பகுதியில், திருக்கோணமலையானது குளக்கோட்டு மகாராசாவினால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. சைவ ஆலயங்களை மையமாகக் கொண்டு ஆட்சிபுரியும் சோழரின் வழக்கத்தோடு திருக்கோணமலையும் ஒத்துப்போவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அக்காலத்தில் திருக்கோணேச்சரமானது அரசியல், வாழ்வியல், பொருளியல் போன்ற, சமூகத்தின் மிகமுக்கிய பல்பரிமாணக் கட்டுமானத்தின் மையமாக விளங்கியிருக்கிறது. சோழரின் தலைநகராக விளங்கிய தஞ்சையில், பெருவுடையார் திருக்கோவிலைச் சூழவும் எட்டுத் திசைகளில் பத்திரகாளிகள் நிறுவப்பட்டிருப்பதை இன்றும் காணமுடிகிறது. அங்கு அவர்கள் பத்திரகாளிக்கு 'அரிகண்டம் நவகண்டம்' என்று அறியப்படும் களப்பலி கொடுத்து தமது போர்களை தொடங்கியிருந்தனர் என்பது வரலாறாகும். இதேபோன்று, இங்கு திருக்கோணேச்சரத்தைச் சூழவும் எட்டு இடங்களில் நிசும்பசூதனப் பத்திரகாளிகள் தாபனஞ் செய்யப்பட்டு, இங்கு வாழ்ந்துவந்த குடிகளால் வழிபாடுகள் இயற்றப்பட்டிருக்கின்றன.

திருக்கோணேச்சரத்தின் சோழர்கால வரலாறு பகரும் 'கோணேசர் கல்வெட்டு' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சோழர்கள் திருக்கோணமலையை வந்தடையும்போது 'அனேகம் சிலைகளுடன்' வந்திருக்கின்றனர். வரலாறுகளின் தொக்கு நிற்றலின் அடிப்படையில், அவற்றுடன் நிசும்பசூதன பத்திரகாளியின் விக்கிரகங்களும் இருந்திருக்கக்கூடும் எனும் ஐயம் நிலவுவதை தவிர்க்கமுடியாதுள்ளது. குளக்கோட்டன், தான் குடிகளை நிறுவிய இடங்களிலும், தனது இராச்சிய எல்லைகளிலும் பத்திரகாளிக்கு பாரம்பரிய தமிழர் பண்பாட்டின் அடிப்படையில் வழிபாடுகள் இயற்றியிருக்கின்றான். இவ்வாறே, ஏறத்தாழ கி.பி. 1076ம் ஆண்டளவில் திருக்கோணமலை நகர்வாழ் மக்களின் வழிபாட்டிற்கென குளக்கோட்டு மகாராசாவினால் 'நகரத்துப் பத்திரகாளி' என்று அழைக்கப்படும் இன்றைய பத்திரகாளியம்மன் ஆலயம் நிறுவப்பெற்றது. ஏறத்தாழ 11ம் நூற்றாண்டளவில் நகரத்துப் பத்திரகாளியம்மன் ஆலயம் சிறப்புற்று விளங்கியமைக்கான





சான்றுகளும் தடயங்களும் உள்ளதாக இலங்கையின் வரலாற்றுப் பேராசான் செ.குணசிங்கம் அவர்களின் குறிப்புகளிலிருந்து தெரியவருகின்றது. இன்றும் இவ் ஆலயத்திற் காணப்படும் 'கல்வெட்டுத் தூணில்' முதலாம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்திகள் பேசப்பட்டிருப்பதானது ஆலயத்தின் தோற்றுவாய்க் காலத்தை அப்பழுக்கில்லாமல் சுட்டிநிற்கிறது எனலாம். இக் கல்வெட்டானது ஆலயத்திற்கான நன்கொடைச் சாசனமாகக் கருதமுடியுமென பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்கள் மேலும் தொடர்கின்றார்.

எனினும் கி.பி.16ம், 17ம் நூற்றாண்டின் காலனித்துவ அடக்குமுறையில், இலங்கையின் இந்துசமய வழிபாடுகள் பெரு வரட்சியை சந்தித்திருந்தன. இந்து ஆலயங்களின் அழிப்புகளும், அந்நியச் சமயங்களின் ஆக்கிரமிப்புகளும் திருக்கோணமலைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தையும் விட்டுவைக்கவில்லை. அக்காலத்தே பக்தர்கள் அந்நிய அச்சுறுத்தலுக்கு அஞ்சி இந்து ஆலயங்களின் தெய்வ விக்கிரகங்களை வேறு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றும், மலைகள் காடுகளுக்குள் ஒழித்து வைத்தும், மண்ணில் புதைத்து வைத்தும் பாதுகாத்தார்கள். இதற்கு பல சான்றாதாரங்கள் திருக்கோணமலையில் காணப்படுகின்றன. இவ்வாறே, பத்திரகாளி அம்மன் விக்கிரகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, அதைச் செப்புக் கிடாரம் ஒன்றினுள் இட்டு புதைத்து வைத்து விட்டனர். பின்னர் பலநூறு வருடங்களின் பிற்பாடு, இந்து மத வழிபாடுகளுக்கான அச்சுறுத்தல் சற்றுத் தணிந்திருந்தது. இவ்வேளையில், இந்தியாவின் இராமேஸ்வரத்திலுள்ள ஒரு பக்தனின் கனாவில் பத்திரகாளி தோன்றி, திருகோணமலையில்; தொங்கு செவ்வரத்தைச் செடியொன்றின் அடியில் தான் புதைந்து கிடக்கும் இடத்தை அடையாளங்காட்டி, தன்னை வெளிக்கொண்டு வருமாறு பணித்துவிட, பக்தரும் இவ்விடம் வந்து விக்கிரகத்தை மீட்டதாக ஆலய வரலாறு கூறுகின்றது. அன்று தொடங்கி இன்றுவரை ஆலயத் திருவிழாக்களின்போது அந்த விக்கிரகமே 'சின்னம்மாள்' என்று சிறப்பிக்கப்பட்டு எழுந்தருளப்படுகிறாள். இங்கு சின்னம்மாள் விக்கிரகத்தின் அமைப்பும், அதைக் காத்திருந்த கிடாரத்தின் வார்ப்பும் பிற்காலச் சோழரின் பயன்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைவதைக் காணமுடிகிறது.

செப்புக் கிடாரமும் அதனுள் சின்னம்மாளும் அற்புதமாக வெளிப்பட்டது போன்று, பத்திரகாளி அம்மனின் மகிமைகளும் அற்புதங்களும் செவிவழிக் கதைகளாகவும் பாடல்களாகவும் வரலாறு நெடுகிலும் கடத்தப்பட்டு வருவதை நாம் காணமுடிகிறது.

மலேசிய நாட்டிலுள்ள கோவிலொன்றுக்காக இந்தியாவிலிருந்து சிம்மவாகனம் ஒன்றை கப்பலில் ஏற்றிக் கொண்டு சென்றதாகவும், அதன் பயணப்பாதையில் எமது பத்திகாளி அம்மன் ஆலயத்திற்கு நேராகக் வரும்போது கப்பல் ஓடாமல் நின்று விட்டதாகவும், பத்திரகாளி அம்மன் கப்பற் தலைவனின் கனவில் தோன்றி அவ்வாகனத்தை தனக்குத் தரும்படி கேட்டதாகவும், பின்னர் சிம்மவானத்தை இவ்வாலயத்திற்குச் சேர்ப்பித்த பின்னரே கப்பல் இயங்கியதாகவும் செவிவழிக் கதையொன்று கூறுகின்றது.

இச் சிம்மவாகனம் இன்னும் இவ் ஆலயத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. ஆலயத் திருவிழாவின் போதும், தீர்த்தத் திருவிழாவிலும் இச்சிம்மமே அம்மனுக்கு வாகனமாக வருவதை இன்றும் காணலாம்.

இதே போன்று சுமார் நானூறு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்ததாகக் கூறப்படும் அற்புதக் கதையொன்றும் உள்ளது. ஓர் நாள் யாகுவ இனத்தைச் சார்ந்த ஒரு பெண் தலை விரிகோலமாக இந்த அம்மன் ஆலயத்தின் முன்றலைக் கடந்து சென்றிருக்கிறாள். அதன் பின்னர், அவளுக்கு கழுத்து வாங்கல் ஏற்பட்டு தலை ஒரு பக்கம் திரும்பி விட்டதாம். பின்னர், பத்திரகாளி அவளின் கனவில் தோன்றி முடியை தனக்குத் தரும்படி கேட்டதாகவும், அவளும் தன் முடியை வெட்டி அம்மனுக்கு காணிக்கை செலுத்தியதாகவும், பின்னர் அவளுக்கு கழுத்து வாங்கல் சரியாகியது என்றும் கூறுவர். அம்முடியையே அம்மன் உற்சவ காலங்களில் இன்றும் சூடி வருகின்றாள்.

காளி காலத்தை வென்றவள். ஒழுங்கு நீதிக்கு முதன்மையானவளும் அவளே. முன்னொரு காலத்தில் நிகழ்ந்த, அம்மன் மறக்கருணை புரிந்த செவிவழிக் கதையுமுண்டு. பத்திரகாளி அம்மனுக்கு பூசை செய்து கொண்டிருந்த பூசகர் ஒருவர் இரவுப்பூசை முடித்து நடை சாத்திவிட்டு வீடு சென்றுவிட்டார்.

ஆனால் பூசைக்கு வந்திருந்த தனது பிள்ளையை ஆலயத்தினுள் அகப்பட்டுக் கொண்டதை அறிந்திருக்க வில்லை. வீட்டிற்குச் சென்று உணவரந்தும்போது பிள்ளையை காணாமல் எங்கும் தேடிவிட்டு ஆலயத்திற்கு வந்து பார்த்தபோது பிள்ளை அங்கிருப்பது கண்டு மனைவியிடம் கூறினார். 'இரவுப் பூசை முடிந்து நடை சாத்திய பின்னர் மீண்டும் ஆலயக் கதவைத் திறத்தல் ஆகாது. ஆசாரமற்றது. காலையில் பார்க்கலாம். என்று மனைவியை அறிவுறுத்தினார், ஆனால் மனைவியோ தன்னிடம் இப்போதே பிள்ளையை கூட்டிவரும்படி அடம் பிடித்தாள். வேறு வழியின்றி, பூசகரும் கதவைச் திறக்கச் செல்லும்போது 'எனது பிள்ளை என்னுடன் இருக்கிறாள். சென்று காலை வா.' என்று அசரீதி கேட்டதாம். ஆனால் மனைவியின் அகங்காரம் பூசகரை மீண்டும் துரத்தியதால் அவர் ஆலயக்கதவைத் திறந்திருக்கிறார். அப்போது 'இந்தா உனக்குப்பாதி எனக்குப்பாதி...' என அசரீதி கேட்டதாகவும் பிள்ளை இரண்டாகக் கிழிபட்டு தூக்கி எறியப்பட்டுக் கிடந்ததாகவும் கூறுவர். அதன் பின்னர், காளியின் உக்கிரம் குறைக்கப்பட்டு, குளிர்விக்கப்பட்டு சாந்தமான வழிபாடுகளே இடம்பெறுவதாகவும் பக்தர்கள் பலரின் செவிவழிக் கதைகள் மூலம் அறிய முடிகிறது.

பத்திரகாளி அம்மனின் அற்புதங்கள் பலவும் முப்பரிமாண காட்சிப் படிமங்களாக ஆலயமண்டபத்திலும் அம்மனின் சித்திரத்தேரைச் சுற்றியும் அமையப்பெற்றிருப்பதை காணமுடியும். இவ்வாறு இன்னும் பல அற்புதங்களையும் மகிமைகளையும் புரிந்து பக்தர்களின் வாழிவியலில் இரண்டறக் கலந்து நிற்கிறாள் பத்திரகாளி அம்மன். இவ் உண்மைத் தெய்வத்தை நினைந்து வழிபட்டு பலரும் பல்வேறு அருளாட்சி அனுபவங்களைப் பெற்று பகிர்ந்து கொள்கின்றனர். வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு இடர்களின்போது பத்திரகாளி அம்மன் ஓர் அன்னையாகி, யாதுமாகி எமைக் காத்து வருகிறாள் என்பதே மெய்.

அம்பாளின் வருடார்ந்த பிரமோற்சவம் எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் ஏப்ரல் மூன்றாம் திகதி மாலை 6.00 மணிக்கு சப்பர திருவிழாவும், 4ம் திகதி செவ்வாய்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவமும் 5ம் திகதி அதிகாலை சமுத்திர தீர்த்தோற்சவமும் இரவு கொடி இறக்கமும் இடம்பெறவுள்ளன.

# ராகுலுக்கு சிறை; சுடச்சுட பிணை



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அவமதிக்கும் விதமான கருத்துக்களை கூறியதாக ராகுல் காந்தி மீது தொடுக்கப்பட்ட வழக்கில் "ராகுல் காந்தி குற்றவாளி" என குஜராத் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2019ஆம் ஆண்டு, மக்களவை தேர்தலை முன்னிட்டு கோலார் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி" பிரதமர் மோடியை விமர்சித்து "எப்படி அனைத்து திருடர்களும் 'மோடி' என்ற பெயரை பொதுவாக வைத்துள்ளனர்"எனத் தெரிவித்திருந்தார்.

ராகுல் காந்தியின் இக் கருத்துக்கு எதிராக குஜராத் பா.ஜ.க எம்எல்ஏ புனரேஷ் மோடி அவமதிப்பு வழக்கொன்றினைப் பதிவு செய்தார்.

இவ்வழக்கு விசாரணை சூரத் நீதிமன்றத்தில் நடைபெற்ற நிலையில் நேற்றைய தினம் தீர்ப்பு வெளியானது.

தீர்ப்புக்கு முன்னதாக பலத்த பாதுகாப்புடன் ராகுல் காந்தி நீதிமன்றத்திற்கு வருகை தந்தார். இந்நிலையில், வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி எச்எச் வர்மா, ராகுல் காந்தி குற்றவாளி எனத் தீர்ப்பளித்தார்.

அத்துடன் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பளித்தார்.

இதனையடுத்து உடனடியாக ராகுல் காந்தி பிணைக்கு முறையிட்ட நிலையில், அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது , 30 நாட்களுக்குள் இத் தீர்ப்புக்கு எதிராக ராகுல் காந்தி மேல்முறையீடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா



## இந்தியத் தூதரகத்தின் மீது தாக்குதல்; லண்டனில் பதற்றம்

பஞ்சாபில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருவதைக் கண்டித்து சுமார் 2 ,000 பேர் லண்டனில் உள்ள இந்தியத் தூதரகம் முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்கள், முட்டைகள், மற்றும் மை போத்தல்கள் வீசி வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து , தூதரக வளாகத்தை சுற்றி கடுமையான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை

## மனைவி மீது அசிட் வீசிய கணவன்

### நீதிமன்ற வளாகத்தில் சம்பவம்



கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வைத்து பெண்ணொருவர் மீது அசிட் வீசப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பெண் மீது அவரது கணவரே அசிட் வீசியுள்ளார் எனவும், இதன்போது வழக்கறிஞர் ஒருவர் அந்நபரைத் தடுக்க முயன்றுள்ளார் எனவும் அப்போது அவர் மீதும் அசிட் வீசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த இருவரும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அசிட் தாக்குதல் நடத்திய நபரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

## ஆபாசப் பட நடிகை விவகாரம்; ட்ரம்ப் கைது?

ஆபாசப் பட நடிகைக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கைது செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், அவர் கைதானதைப் போன்ற போலி புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தன்னோடு நெருக்கமாக இருந்ததை பற்றி வாய் திறக்காமல் இருக்க பிரபல ஆபாச நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்கு, ட்ரம்ப் தேர்தல் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதனைத் தொடர்ந்து அவர் மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் ட்ரம்பின் முன்னாள் வழக்கறிஞரான மைக்கேல் கோஹன், இந்த வழக்கில் ட்ரம்பிற்கு எதிராக சாட்சியளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து தான் கைது செய்யப்பட்டால் தனக்காகப் போராடுமாறு ஆதரவாளர்களுக்கு ட்ரம்ப் அழைப்பு விடுத்திருந்தார். இதனால், கடந்த 2 தினங்களாக நியூயோர்க்கிலும், வோஷிங்டனிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்



## மீம் கிரியேற்றருக்கு 4 லட்சம் ரூபாய் சம்பளம்

பெங்களூரைச் சேர்ந்த 'ஸ்டாக்க்ரோ' என்ற நிறுவனமானது, தமது நிறுவனத்திற்கு தலைமை மீம் அதிகாரியொருவரைத் தேடி வருவதாக அறிவித்துள்ளது.

இப்பணியில் அமர்த்தப்படுபவர்களுக்கு மாதம் 1 லட்சம் ரூபாய் சம்பளமாக வழங்கப்படுமெனவும், மேலும், வீட்டிலிருந்தே பணிபுரியலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்நிறுவனத்தின் தலைமை அதிகாரி அஜய் லகோதா கருத்துத் தெரிவிக்கையில் "மீம் கிரியேற்றர்கள் மூலம் எங்களால் வாடிக்கையாளர்களுடன் தொடர்பை இலகுவாக ஏற்படுத்த முடியும், இதன் விளைவாக புதிதாக வருபவர்கள் எங்கள் தளத்தை ஆராய்ந்து பார்க்க விரும்புவார்கள்.

அத்துடன் இந்நிறுவனத்தை உற்சாகமாக வைத்திருக்கும் கடமை மீம் கிரியேற்றர்களுக்கு உள்ளது. மீம்களின் மாயாஜாலத்தைக் காண ஆர்வமாக இருக்கின்றோம்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## போருக்கு எதிராக நூதனப் போராட்டம்

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த ஒரு வருடங்களாக உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொண்டு பதில் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரேனுக்கு பல மில்லியன் மதிப்புள்ள இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

அதே சமயம் சீன அரசு ரஷ்யாவுக்கு தனது ஆதரவை வழங்கி வருகின்றது. இந்நிலையில் ரஷ்யாவில் இஷெவ்ஸ்க் என்ற நகரில் நிகிடாகோர்புனோவ் என்ற இளைஞர் ஒருவர் போருக்கு எதிராக நூதன முறையில் போராட்டம் நடத்தியுள்ளார்.

அதாவது அந்த இளைஞரின் கையில் வைத்திருந்த பதாகையில் "நீங்கள் போருக்கு எதிராக இருந்தால் என்னை கட்டிப்பிடித்துச் செல்லுங்கள்"




என்று எழுதப்பட்டிருந்தது.

இதனையடுத்து பலரும் அவரை கட்டிப்பிடித்து தனது ஆதரவை தெரிவித்துச் சென்றனர் .

இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார், உடனடியாக நிகிடாவை கைது செய்தனர்.

இந்நிலையில் அவருக்கு 15,000 ரூபில்கள் அபராதம் விதிக்கப்பட்டுபின் விடுவிக்கப்பட்டார்.

ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில்

# நியூசிலாந்தை வீழ்த்துமா இலங்கை?



நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, ஒக்லன்டில் நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு தரவரிசையில் முதல் எட்டு இடங்களிலுள்ள அணிகளே நேரடியாகத் தகுதி பெறும் என்ற நிலையில், இத்தொடரில் நியூசிலாந்தை வெள்ளையடித்தால்தான் இலங்கை உலகக் கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

அஞ்சலோ மத்தியூஸ் குழாமுக்குத் திரும்பியிருப்பது மத்திய வரிசையை நிலைப்படுத்த இலங்கைக்கு உதவுமென்றபோதும் பதும் நிஸங்க, குசல் மென்டிஸ், தனஞ்சய டி சில்வா போன்றோரிடமிருந்தும் தொடர்ச்சியான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பந்துவீச்சுப் பக்கமும், கசுன் ராஜிதவுடன், டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண, பிரமோத் மதுஷன் உள்ளிட்ட இளம் வேகப்பந்துவீச்சாளர்களிலேயே இலங்கை தங்கியிருக்க வேண்டியுள்ளது.

மறுப்பக்கமாக கேன் வில்லியம்ஸன், டிம் சௌதி, டெவோன் கொன்வே, மிற்செல் சான்ட்னெர் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தொடரானது மார்க் சப்மன், றஷின் றவீந்திரா, வில் யங்க் ஆகியோருக்கான வாய்ப்பாகக் காணப்படுகின்றது. தவிர, பின் அலெனும் தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றார்.




இந்தியாவுக்கு எதிரான

## தொடரைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வென்றிருந்த நிலையில், சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 269/10 (49 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 47 (47), அலெக்ஸ் காரி 38 (46), ட்ரெவிஸ் ஹெட் 33 (31), மர்னுஸ் லபுஷைன் 28 (45), ஷோன் அபொட் 26 (23), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 25 (26), டேவிட் வோர்னர் 23 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்டிக் பாண்டியா 3/44, குல்தீப் யாதவ் 3/56, மொஹமட் சிராஜ் 2/37, அக்ஸர் பட்டேல் 2/57)

இந்தியா: 248/10 (49.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 54 (72), ஹர்டிக் பாண்டியா 40 (40), ஷுப்மன் கில் 37 (49), லோகேஷ் ராகுல் 32 (50), றோஹித் ஷர்மா 30 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடம் ஸாம்பா 4/45, அஸ்தன் அகர் 2/41, மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 1/43, ஷோன் அபொட் 1/50)

போட்டியின் நாயகன்: அடம் ஸாம்பா

தொடரின் நாயகன்: மிற்செல் மார்ஷ்



துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில்

## இரண்டாம் இடத்துக்கு முன்னேறிய வில்லியம்ஸன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு நியூசிலாந்தின் கேன் வில்லியம்ஸன் முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 215 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்து ஆறாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை வில்லியம்ஸன் அடைந்துள்ளார்.

குறித்த டெஸ்டில் 140 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையின் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, 11ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. கேன் வில்லியம்ஸன், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. ஜோ றூட், 5. பாபர் அஸாம், 6. ட்ரெவிஸ் ஹெட், 7. உஸ்மான் கவாஜா, 8. டரைல் மிற்செல், 9. றிஷப் பண்ட், 10. திமுத் கருணாரத்ன. முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. ஜேம்ஸ் அன்டர்சன், 3. பற் கமின்ஸ், 4. ககிஸோ றபாடா, 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, 6. ஒலி றொபின்ஸன், 7. ஜஸ்பிரிட் பும்ரா, 8. நேதன் லையன், 9. இரவீந்திர ஜடேஜா, 10. கைல் ஜேமிஸன். முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. அக்ஸர் பட்டேல், 5. பென் ஸ்டோக்ஸ்.

நுவரெலியா வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டை:

## பிரகாசித்த கொட்டகலை த.ம.வி



பி. கேதீஸ்

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நுவரெலியா சினிசிட்டா உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை ஐந்து தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளது.



சம்மாந்துறை மத்திய கல்லூரி இல்ல விளையாட்டு போட்டி:

## சம்பியனான சிவப்பு இல்லம்

நூருல் ஹுதா உமர்

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய (தே.பாடசாலை) இல்ல விளையாட்டுப் போட்டி இறுதிநாள் நிகழ்வுகள் வெகுசிறப்பாக அண்மையில் நடைபெற்று முடிந்தது.

சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் போன்ற இல்லங்கள் போட்டியிட்ட இந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சிவபப்பில்லம் இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 24 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.